224501

தொண்டை மண்டலம்
சோழிய வேளாள மரபோர்
ஏற்படுத்திக் கொண்ட
வியவகார ஆசாரசட்டம்

Y592C
N16
224501

For Private Circulation Only.

OFFICE OF THE REGISTRAR OF SOCIETIES
REGISTERED
29 FEB 1916
MADRAS.
B

தொண்டைமண்டலம்,

சோழிய வேளாள மரபார்

ஏற்படுத்திக்கொண்ட

விவகார, ஆசாரசட்டம்.

இதையும்;

திருநெல்வேலிஜில்லா

எட்டயபுரம் சமஸ்தான வித்வான்,

திருமயிலை

வி. சுந்தரமுதலியாரவர்களால்

தொகுத்தெழுதிய சரித்திரமும்

சேர்த்து, மேற்படி

சோழிய வேளாளர் மரபுதரும

சங்கத்தாரால்,

சென்னை மஹாலட்சுமி விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1915ஞ ஜுன்மீ

இதன் விலை அணா-2.

இச்சட்டவரலாறு.

சிறப்புற்றோங்கும் புண்ணியநதியாகிய காவிரி சூழ் சோழதேசத்திலிருந்து, ஆதொண்டைச் சக்கரவர்த்தியோடு, இத்தொண்டைநாட்டில் வந்து குடியேறிய சோழியவேளாள மரபாரும், மற்ற வேளாள வகுப்பாரும் ஷை நாட்டில் வசித்து வருகையில், காவிரிதீரத்தில் வாசஞ்செய்திருந்த சோழிய வேளாளர் இந்தத் தொண்டை நாட்டில் வசித்திருக்க சவுகரியப் படாமையால், பலர் தங்கள் சொந்ததேசமாகிய தென் சோழம்போய்ச் சேர்ந்தார்கள். சென்றவர்கள்போக, நின்றவர்களெல்லாம் ஒருதேசத்து வேளாளராகையால், இத்தொண்டைநாட்டில் தானே நாளாவர்த்தியில், கொள்ளல், கொடுத்தல் முதலிய சம்பந்தமுஞ் செய்துகொண்டு வந்தார்கள்.

அதையநுசரித்துப் பிற்காலத்தில் மேதாவிகளாயுள்ள பெரியோர்கள் சேர்ந்து, ஷை சோழிய வேளாளமரபார் ஒத்துமையாயிருந்து சாதிகட்டுப்பாட்டுக் கடங்கி நடந்துவர வேண்டுமென்னும் நல்லெண்ணத்தினால், அநுபோகத்தையும், சாதியாசாரத்தையுந் தழுவிப் பலகூட்டங்கள் கூடி ஆலோசித்து ஏற்படுத்திக்கொண்ட விவகார, ஆசாரதரும சட்டத்தை, சென்ற 1866௵ ஜுன்௴ 28௳க்கு அக்ஷய௵ ஆனி௴ 16௳யில், ம-ள-ள-ஸ்ரீ, வெள்ளிவாயல் நாட்டுப் பெரியதனம், வெ.வி. அப்பாசாமி முதலியார், ம.ள.ள.ஸ்ரீ, வெ.அ. பொருமான் முதலியார் ஆகிய இவர்கள் முன்னிலையில், திருவொற்றியூரில் கூடிய ஷைமரபார் மகாநாட்டுக் கூட்டத்தில் வாசித்து யாவராலும் ஆமோதிக்கப்பட்டு, ஷை சட்டம் அக்காலந் தொடங்கி ஆசாரத்திலிருந்து வருகின்றது.

ஷை சட்டத்தில், காலக்கிரமத்தை அநுசரித்து சில சீர்திருத்தஞ்செய்விக்க ஷைமரபாரிற்சிலர் விரும்பிய வண்ணம், 1908௵ பிப்ரவரி௴ 16௳க்கு பிலவங்க௵ மாசி௴ 5௳யில், ம.ள.ள.ஸ்ரீ, ஷை வெள்ளிவாயல் நாட்டுப் பெரியதனக்காரரும், எட்டயபுரம் சமஸ்தானவித்வானுமாகிய திருமயிலை வி. சுந்தரமுதலியாரவர்களால், சிலவிதிகளேற்படுத்தியதை 1913௵ ஏப்ரல்௴ 6௳க்கு பரிதாபி௵ பங்குனி௴ 24௳யில், திருவொற்றியூரில் ஷைமரபார் கூடிய மகாநாட்டுக்கூட்டத்தில் வாசித்து, யாவராலும் அங்கீகரிக்கப்பட்டு, ஷை சட்டத்தை அச்சிற் பதிப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. சுபம்.

☞ இச்சட்டம், தொண்டை மண்டலத்தைச் சார்ந்த சிலகிராமங்களிலும், சென்னைப்பட்டணத்திலும் வசிக்கும்சோழியவேளாள[illegible]அநுசரித்தவையாயிருக்கும்.

224501

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 FEB 1916
MADRAS.

உ

சிவமயம்.

சோழ மண்டலத்தைச் சார்ந்த

தொண்டைமண்டலத்திலிருக்கும்

சோழிய வேளாள மரபார்

விவகார, ஆசாரசட்டம்.

1866வரு ஜூன்மீ 28உக்குச் சரியான அக்ஷயவரு ஆனிமீ 16உ திருவொற்றியூரில் கூடிய நமது மரபார் மகா நாட்டுக் கூட்டத்தில், நமது வருணாசார தருமத்தை நமது பெரியோர்கள் அடைந்திருந்த கௌரவத்திற்குக் குறைவு நேறிடாமல், நமது மரபின் விவகார, ஆசாரதருமம் இரண்டும், இதனடியில் வருகிறகிரமப்படி நடத்திவரும்பொருட்டு, முன்னோர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

விவகார தருமம்.

முதலாவது.

நமது சோழிய வேளாள மரபார் இருக்கும் கிராமங்களைக் கூட்டங்கள் கூடுவதற்குச் சௌகரியார்த்தமாக ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

அவைவருமாறு.

——):o:(——

1 வெள்ளிவாயல் நாடு.
,, ஷை சாவடி.
,, புங்கம்பேடு.
,, திருநிலை.
,, பெருங்காவூர்.
,, திருவொற்றியூர்.

320
1592.c
N16

2 குமாரசிரளப்பாக்கம்.

---

3 ஆயல்சேரி.

---

4 அலமாதி.

---

5 அவணம்பாக்கம்.
" தாமரைப்பாக்கம்,

---

6 கருக்கலவாக்கம்

---

7 சென்னபட்டணம்.
" சூளை.
" புரசைபாக்கம்.
" டாக்கர் சத்திரம்.
" கோமளீசுரன்பேட்டை.
" சிந்தாதிரிப்பேட்டை.
" வண்ணாரப்பேட்டை.

---

8 திருமயிலாப்பூர்.
" திருவல்லிக்கேணி.

---

9 மணிமங்கலம்.

ஆ மொத்தகிராமம். 9.

இந்தசட்டத்தினுட்கருத்து.

இந்தச்சட்டத்தில் வரும் மரபுஎன்னும் பதம், சோழிய வேளாள மரபினையே குறிப்பிக்கும்.

நாடு என்று வருமிடங்களில், வெள்ளிவாயல் கிராமமென்னும், அதில், முதன்மையான நாட்டாரும், உதவி நாட்

டாரும் வசிக்குமிடம் என்று யாவரும் பாவித்து வரவேண்டும்.

உள்ளூரென்று வழங்கும் இடங்களை, ஷை மரபார் வசிக்கும் கிளைக்கிராமங்களாகக் கொள்ளல்வேண்டும்.

பெரியதனக்காரரென்று வருமிடங்களில், ஒவ்வொரு கிராமத்தின் மரபாருக்குத் தலைவரென்றும், உதவித்தலைவரென்றும் கொள்ளல் வேண்டும்.

பொக்கிஷதாரென்று வருமிடங்களில், ஷை மரபின் வரவு, செலவு, இருப்பு முதலிய கணக்குகளை வைத்திருப்பவரென்று, கொள்ளல் வேண்டும்.

டிரஸ்டிகளென்று வருமிடத்தில், ஷை மரபைச்சார்ந்த தருமங்களின் கட்டணம் அபராத முதலிய வசூல் தொகைகளை பாதுகாப்பவர்களென்று கொள்ளல் வேண்டும்.

இரண்டாவது.

மேற்படி கிராமங்களிலிருக்கும், நமது மரபார் வருணாசார தருமங்களைத்தெரிந்து நடத்துவதற்கு ஒவ்வொரு கிராமத்திலும், இரண்டு பெரியதனக்காரர்கள் இருக்கவேண்டும்.

மூன்றாவது.

பூர்வீகமாக முன்னோர்களாலே, ஏற்படுத்தப்பட்ட நமது நாடாகிய வெள்ளிவாயல்கிராமத்திற்கு ஏற்படுகிற நாட்டாரவர்களை ஷை நாட்டுக்குத் தலைமையான பெரியதனக்காரர்களாக இருந்துகொண்டு, அந்தந்த கிராம பெரியதனக்காரர் மூலமாய் அடியில் விவரித்திருக்கிற ஏற்பாடுகளை வழுவுதலில்லாமல் நடத்திவரவேண்டும்.

மேலும், மகாநாட்டுக் கூட்டத்திற்கும், ஷைநாட்டு உள்ளூர் கூட்டத்திற்கும், நாட்டாரவர்களே அக்கிராசனாதிபதியாயிருந்து சபையை நடத்திவரவேண்டும்.

நான்காவது.

அந்தந்த கிராமங்களில் உண்டாகும் விவகாரங்களை ஷை கிராம பெரியதனக்காரர் கூட்டம் வைத்து பைசல் செய்து, குற்றவாளிகளுக்குக் கூட்டத்தார் அபிப்பிராயப்படி அபராதம் விதித்து, அப்போதைக்கப்போது, கண்டித்துக்கொண்டு வரவேண்டியது. சிலசமையங்களில், ஒருகிராமத்தின் பெரியதனக்காரர் விவகார விஷயங்களில், அடுத்த கிராமத்துப்பெரியதனக்காரரையுங் கலந்து யோசித்து விவகாரங்களை நடத்துவதில் ஆட்சேபனையில்லை யென்பதை யாவருங்கவனித்து வரவேண்டும்.

ஐந்தாவது.

குற்றவாளிகள், அபராதங்கட்டத் தவறிப்போய் விட்டாலும், கூட்டத்தாருக்கு, அடங்கி உத்திரவு சொல்லாவிட்டாலும், அந்தந்தக்குற்றவாளியை, அபராதங்கட்டி வணங்கி வருகிற வரையில், நமது மரபார் விலகியிருக்கவேண்டும்.

ஆறாவது.

அப்படிக்கொருவர், குற்றத்தைக்குறித்து விசாரிக்குங் காலத்தில், அந்தக்குற்றம் ஸ்தாபிக்கப் படுகிறதற்காவது, அப்படி ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, அபராதம் விதிக்கப்படுவதற்காகவாவது, பெரியதனக்காரர்கள் முன்னுதாக தங்கள் அபிப்பிராயத்தை சபையாருக்குத்தெரியப்படுத்த வேண்டும்.

அந்த அபிப்பிராயத்தில், சபையார் ஏகோபித்து கலக்காத பட்சத்தில், அதிக ஜனத்தொகை சம்மதியை ஒப்புக்கொள்ளக்கடவர், அப்படி ஏற்படும் கட்சிகள் இரண்டின் தொகை சமமாயிருக்குப்பட்சத்தில், பெரியதனக்காரர் சேர்ந்திருக்கும் கட்சியின் அபிப்பிராயப்படி நிறைவேற்ற வேண்டும், பெரியதனக் காரர்களில், கட்சிக்கு ஒருவர் சேர்ந்து தொகை சமமாகஇருக்கும் பட்சத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எந்தகட்சிக் காரருடைய அபிப்பிராயம் அநுகூலமாக விருக்கிறதோ அதை ஒப்புக்கொள்ளல் வேண்டும்,

ஏழாவது.

யாதாமொருவர், குற்றவாளியென்று ஏற்பட்ட காலத்தில், அந்தகுற்றவாளி நடவடிக்கையை கூட்டம்போட்ட எட்டாவது தினத்தில், நாட்டாருக்குப் பெரிதனக்காரர் கடித மூலமாகத் தெரிவிக்கவேண்டும்.

எட்டாவது.

இவ்வித குற்றவாளிகள் வீட்டுக்கு, மற்றமாபார் போகவும், போசன முதலாகியது செய்யவுங்கூடாது. ஷை குற்றவாளியை தங்கள் வீட்டுக்குள் சேர்க்கவுங் கூடாது. யாதாமொரு விவகாரத்தைப் பற்றி ஷை குற்றவாளி ஒருவர் வீட்டுக்குப் போகவேண்டியதிருந்தாலும், குற்றவாளி தங்கள் வீட்டுக்கு வரவேண்டியதிருந்தாலும், உள்ளூர் பெரியதனக்காரர்களிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு போகவேண்டும்.

ஒன்பதாவது.

மேற்கண்ட எட்டுதினத்திற்குள் குற்றவாளி அபராதங்கட்டி விட்டாலும், கூட்டத்தார் தீர்மானப்படி ஒப்புக்கொண்டாலும், உள்ளூர் கூட்டத்தில்தானே அவர்களை சேர்த்துக்கொண்டு நடந்த நடவடிக்கைகளை உடனே நாட்டாருக்குக் கடிதமூலமாய்த் தெரியப்படுத்தவேண்டும். சொற்பசங்கதிகளை நாட்டாருக்குத் தெரியப்படுத்த வேண்டியதில்லை. உள்ளூர் கூட்டத்தில், பைசல் செய்யக்கூடாத பெரியகுற்றங்களை, அந்தந்த குற்றவாளிகள் மகாநாட்டுக் கூட்டத்தில், பைசல் செய்துக்கொள்ளல் வேண்டும். அப்படிப்பட்ட விஷயங்களை பெரியதனக்காரர்கள் நாட்டாருக்கு உடனே தெரியப்படுத்தவேண்டும்.

பத்தாவது.

மேற்படி எட்டுதினத்திற்குள், குற்றவாளி அபராதங்கட்டாத காரணத்தால், பெரியதனக்காரர் நாட்டாருக்குத் தெரியப்படுத்தி விட்டபின்பு, ஒருமாதத்திற்குள்ளே கூட்டச்செலவுடன் இரட்டிப்பு அபராதம் கட்டிவிட்டால், உள்ளூராரே ஷை குற்றவாளியைச் சேர்த்துக்கொண்டு நாட்டாரவர்கள் மூலமாக பத்தூராருக்கும் தெரியப்படுத்தவேண்டும்.

அவ்விதம் கட்டுத்தவறிப்போனால், மகாநாட்டுக் கூட்டத்தாரால், தன் குற்றத்தை நிவர்த்திசெய்து கொள்ளுகிற வரையில், டிஷ குற்றவாளியை விட்டு மரபார் விலகி யிருக்க வேண்டும்.

பதினோராவது.

4. 9. 10-வது கலங்களில் கண்டபடிக்கு, நாட்டுக்குக் கடிதம் வந்த ஒரு வாரத்திற்குள்ளாக, உள்ளூர் கூட்டம் வைத்து நாட்டாரவர்கள் அக்கடிதத்தை வாசித்து அந்தக் கிராமத்தார்நடத்திய தீர்மானங்கள் யுக்தமாயிருக்கும் பட்சத்தில், ஆலசியமில்லாமல், மற்றக்கிராமத்துப் பெரியதனக்காரர்களுக்குக் கடித மூலமாகத் தெரிவித்தல் வேண்டும்.

பன்னிரண்டாவது.

நாட்டாரவர்கள் மூலமாய், எல்லாக் கிராமங்களுக்கும் சங்கதி தெரிகிறதற்கு முன்பு, குற்றத்தினால் விலகியிருக்கப்பட்டவர் யாதாமொரு பிரயோஜனத்திற்கு வந்தால், அது சங்கதி தெரிந்தவர்கள் உடனே பிரயோஜனக்காரர்களுக்குத் தெரியப் படுத்தவேண்டும். அதன்பேரில், பிரயோஜனக்காரர் அவரை நீக்கித் தன் பிரயோஜனத்தை நடத்தவேண்டும்.

மேற்படி நாட்டிலிருந்து கடிதம் தங்களுக்கு இன்னும் வந்து சேரவில்லையென்கிற காரணத்தினால், எவ்வளவும் அவ்விதம் நீக்கப்பட்டவர்களை வைத்துக்கொண்டு, பிரயோஜனத்தை நடத்தக்கூடாது. இவ்வித நியாயவிரோதமான காரியங்கள் நடவாமலிருக்கும்படி அந்தந்த கிராம பெரியதனக்காரர்கள் கண்ணோக்கம் வைத்து வரவேண்டும்.

பதின்மூன்றாவது.

குற்றத்தினால், விலகியிருக்கப்பட்டவர் தன்குற்றத்தை மஹா நாட்டுக் கூட்டத்தார் முன்பாக பரிகரித்துக்கொள்ளால் வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டால், அந்தக் குற்றவாளி அதுசங்கதியை அந்தஉள்ளூர் பெரியதனக்காரரிடத்தில் விண்ணப்பமூலமாக கூட்டச்செலவுடன் தெரியப்படுத்திக் கொள்ளல்வேண்டும்.

அதன்பேரில், பெரிய தனக்காரர்கள் கூட்டம் வைத்து காலக்கிரயத்தையும், குற்றத்தின் சுபாவத்தையும் அநுசரித்து எத்தனைநாள் மஹாநாடு கூட்டங்கூடிப் பேசவேண்டியதிருக்கிறதோ அதை யோசித்து மஹா நாடு கூட தண்டுகாசின் செலவுடன் நிஷ்கரிஷைசெய்து அதை குற்றவாளிகளிடத்தில் வசூல்செய்து நாட்டுக்குக் கடிதமெழுதி, ஷை தொகையை நாட்டாரவர்களிடம் அனுப்பி மஹா நாட்டுக்கூட்டம் போட்டு வைக்கவேண்டும்,

பதினான்காவது.

அந்தந்த கிராம பெரியதனக்காரர்கள், தங்கள் இலாக்காவுக்குளிருக்கும், நமது மரபார் வருணாசார தருமங்களை வழுவுதலில்லாமல், நடத்திக்கொண்டு வருகிறார்களா வென்பதை நாட்டார் கண்ணோக்கம் வைத்து வருவதுமல்லாமல்; தங்களுடைய கேள்விக்கு வருகிற தப்பிதங்களை உடனுக்குடனே கூட்டம் வைத்து பரிஷ்கரித்துக் கொண்டு வருகிறதற்குப் பொறுப்பாக இருக்கவேண்டும்,

ஒரு வேளை, ஒவ்வொரு கிராமத்தில் நடக்கும் தப்பிதங்களை நாட்டாரவர்கள் நேரிலிருந்து விசாரிக்கும்படி அந்தக்கிராமத்தார் கேட்டுக்கொள்ளும் பட்சத்தில், அந்தக் கூட்டச் செலவை அவர்களே கொடுக்கவேண்டும்.

பதினைந்தாவது.

அந்தந்த கிராமங்களின், ஒவ்வொரு கூட்டத்தின் விஷயங்களெல்லாம், எழுத்து மூலமாகவே யிருக்கவேண்டும். விசாரணையில் யார்பேரில் குற்றஞ் சாட்டப்படுகிறதோ அவர்களே சபையில் நின்று உத்திரவுசொல்லி சபையாரை வணங்கிக்கொள்ளல் வேண்டும்.

ஆனால், குற்றவாளி வயது சென்றவராயும், ஸ்திரீ ஜாதியாயும், வயதுவராத சிறுவராயும் இருக்கிற பட்சத்தில், அவர்களுக்காக, அந்தக் குடும்ப ஜேஷ்டராயுள்ளவர்கள் உத்திரவாதியாய் முன்னின்று உத்திரவு சொல்ல வேண்டும்; அப்படிப்பட்ட வயது சென்றவராவது, ஸ்திரீ ஜாதியாவது, சிறுவராவது நேரே வரவேண்டுமென்று உத்திரவு செய்தே

பட்சத்தில், அவர்களை அக்குடும்பத்தார் ஆஜர்படுத்தவேண்டும். அவ்வாறு, ஆஜர்படுத்தத் தவறினால், ஷை கூட்டத்தில் விதிக்கும் ஏற்பாட்டிற்கு அவர்கள் இணங்கி நடக்கவேண்டும்.

பதினாறாவது.

ஸ்திரீகளின் கற்பு முதலியவைகளை, காக்குங்கடமை விவாகத்திற்கு முன்பு தகப்பனும், பின்பு கணவனும், அதன் பின்பு புத்திரனுமேற்பட்டு இருக்கிறபடியால், அவர்கள் விஷயங்களில் நேரிடும் கேள்விகளுக்கு மேற்கண்டவர்களே உத்திரவாதிகளாக இருக்கவேண்டும்.

பதினேழாவது.

மஹா நாட்டுக் கூட்டத்திற்கும், உள்ளூர் கூட்டங்களுக்கும், குறிப்பிட்ட காலங்களில், யாவரும் வந்துசேர்ந்து நாட்டாரும், பெரியதனக்காரர்களும், சபையாரால் அக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டவர்கள் மாத்திரம் கூட்டவிஷயங்களைப் பற்றிப் பேசவேண்டியதே யல்லாமல், எல்லோரும் ஏக கோஷ்டமாக வார்த்தைகள் சொல்லக் கூடாது. மற்ற யாராவது தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கச் சம்மதியிருந்தால், அவர்கள் கூச்சல் போடாமல், மற்றவர்கள் வார்த்தை சொல்லியான பின்பு, நிதானமாயும், மரியாதையாயும் தெரிவித்துக் கொள்ளல் வேண்டும். அல்லது, மேற்படி சபையில் பேசுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறவர்களில், ஒருவரிடத்தில், மெதுவாகச் சொல்லி தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளல் வேண்டும். மேலும், நாட்டாரிடத்திலாவது, பெரியதனக்காரரிடத்திலாவது, சபையாரால் ஏற்படுத்தினவர்களிடத்திலாவது, ஒருவரும் அதிக்கிரமித்து வார்த்தைகள் சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னவர்கள் ஷை சபையில் விதிக்கப்படும் ஏற்பாட்டிற்கு இணங்கி நடக்கவேண்டும்.

பதினெட்டாவது.

எந்தக் கிராம பெரியதனக்காரராவது, தங்கள் இலாகாவில் நடக்கும், அக்கிரமங்களை பரிஷ்கரிக்க கூட்டம் வைக்காமல், ஆலஸியப் படுத்திக்கொண்டு வந்தாலும், அல்லது, பெரியதனக்காரர்கள் பேரிலேயே குற்றம் நேரிட்டிருந்தாலும்,

அது சங்கதிகளைத் தெரிந்த மற்றவர்கள், நாட்டாரவர்களுக்குத் தெரிவித்தாலும், நாட்டார் கேள்வி மூலமாய்த் தெரிந்தாலும், உடனே ஷை பிராதின் சங்கதிகளை ஆலஸியமில்லாமல் தங்களுக்குத் தெரியப்படுத்தும்படி ஷை பெரிய தனக்காரர்களுக்கு உத்திரவு உடனே அனுப்புதல் வேண்டும்.

ஷை பெரியதனக் காரர்கள், நாட்டாருடைய கடிதம் சேர்ந்த எட்டுதினத்திற்குள்ளாக உள்ளூர் கூட்டம்போட்டுத் தெரிவிக்கத் தவறிப்போனாலும், அவர்கள் பேரில் தப்பிதமிருக்கிறதாகத் தெரிய வந்தாலும், அதை நாட்டுக் கூட்டத்தில் யோசித்து நியாயமாக அவர்களுக்கு அபராதம் விதித்து, மற்ற குற்றவாளிகள் ஒப்பந்தம் நடத்தல் வேண்டும்.

இவ்விதமாக பெரியதனக்காரர்பேரில் குற்றம் நேரிட்டு நீக்கப்பட்டால், அந்தக் குற்றத்தை அவர்கள் பரிகரித்துக் கொள்ளுகிற வரையிலாவது, அவர்கள் தளாதென்று மகாநாட்டுக்கூட்டங்கூடி வேறே காயமாகப்பெரியதனக்காரர்களை ஏற்படுத்துகிற வரையிலாவது, பதிலாக நாட்டாரவர்கள் தகுந்தவர்களை தங்கள் உத்தேசப்படிக்கு பெரியதனக் காரர்களாக ஏற்படுத்தி, அதுசங்கதியைப் பத்தூராருக்கும் தெரியப்படுத்தவேண்டும்.

பத்தொன்பதாவது.

ஒவ்வொரு உள்ளூர்க் கூட்டங்களுக்கும், சபைத்தலைவர்களாக அந்தந்த கிராமப் பெரியதனக்காரர்கள் இருக்கவேண்டும். ஒருவர்வர அசந்தர்ப்பம் நேரிட்டால், மற்றொருவரிருந்து சபையை நடத்தவேண்டும். அந்த கூட்டங்களுக்குத் தகுந்த காரணமில்லாமல் நாழி சென்று வரப்பட்டவர்களுக்கு அணா ஒன்றும், வராதவர்களுக்கு அணா இரண்டும் அபராதம் விதிக்கப்படும். யாதாமொரு காரணமில்லாமல் நின்று போகின்றவர்களும், தகுந்த காரணத்தைத் தெரிவித்து நின்று போகின்றவர்களும் மறுநாள், அல்லது, மூன்றுநாள் பெரியதனக்காரர் வீட்டிற்குவந்து கூட்டத்தில் நடந்த சங்கதிகளை அறிந்துகொண்டு அந்த உள்ளூர் கூட்டத்தின் பதிவுபுத்தகத்தில் கையொப்பம் வைத்துவிட்டுப் போகவேண்டும். யாதாமொருவர் கூட்டத்தில் நடந்த சங்கதிகள் தனக்குத் தெரியா

தென்று சொன்னால், அதை எவ்வளவும் சபையார் ஒப்புக் கொள்ளக்கூடாது;

மேலும், மகாநாடு கூட்டத்திற்காவது, உள்ளூர் கூட்டத்திற்காவது வரப்பட்டவர்கள் கூட்டம் முடிவாகிறவரையிலிருந்து பேசவேண்டிய விவகாரங்களைப்பேசி முடிவு செய்த பின்பு, ஷை கூட்டத்தின் பதிவு புத்தகத்தில் யாவரும் கையொப்பஞ் செய்துவிட்டுப் போகவேண்டும். ஷை கூட்டங் கலையுமுன் எழுந்து சொல்லாமற் போகிறவர்களுக்குச் சபையாரால் விதிக்கும் நிபந்தனைக்கு உள்ளாக வேண்டும்,

அந்தந்த உள்ளூரார் கூட்டங்களுக்குச் சொல்லியும் கிரமமாய் வராமலும், சாதி கட்டுப்பாட்டுக் கூட்டம் என்பதை நினையாமலும் இருப்பவர்களுக்கு, கூட்டம் ஒன்றுக்குமேற் கண்டபடி அணு இரண்டும், மகாநாட்டுக் கூட்டத்திற்கு வராதவர்களுக்கு அணு நான்கும், அபராதம் விதிக்கப்படுவதோடு, தொடர்ச்சியாய் மூன்று உள்ளூர் கூட்டங்களுக்கு வராமலிருப்பவர்களை பெரியதனக்காரர் நேரில் விசாரியாமலே சுபாசுபங்கள் அதுமுதல் அவர்களுக்குச்சொல்லாமலே மற்றவரயார் விலகியிருக்க வேண்டும்.

அவர்கள்; உள்ளூர் கூட்டச் செலவைக் கொடுத்து கிரமப்படி விசாரணை செய்யப்பட்டபின்பு, அவர்களுக்குச் சுபாசுபங்கள் சொல்லவேண்டும். அதற்கும், இணங்கி வராதவர்களைக் குறித்து, பெரியதனக்காரர்கள் நாட்டுக்குத் தெரியப் படுத்தி விடவேண்டும்.

இருபதாவது.

அந்தந்த கூட்டத்தில் தருமத்திற்காக வசூல் ஆகிற அபராதத் தொகைக்குச் சரியான கணக்கு வைத்து, மகாநாட்டுக் கூட்டத்தாரால் ஏற்படுத்தியிருக்கிற பொக்கிஷதாரிடத்தில் அப்போதைக் கப்போது சேர்ப்பித்து ரசீது பெற்றுக் கொள்ளல் வேண்டும், பொக்கிஷதார் அந்தந்தக் கிராமத்தில் வரவேண்டிய பாக்கித் தொகைகளைப்பற்றி அடிக்கடி கடிதம் எழுதிகேட்டுவரவேண்டும், தொகை வந்து சேராத பட்சத்தில், உடனே நாட்டாருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

ஆறுமாதத்திற் கொருதடவை பொக்கிஷதார் நாட்டாரவர்களிடத்திற்கு கணக்கு சகிதமாய் முன்கணக்கையுந் தொடர்ந்தெழுதி யனுப்பிக்கொண்டு வரவேண்டும்.

அந்தந்த கிராமப் பெரியதனக்காரர்கள், தங்கள் உள்ளூர் கூட்டச் செலவுக்காக பொக்கிஷதாருக்கு விவரத்துடன் கடிதமூலமாகத் தெரிவித்து ரூபா இரண்டுக்கு அதிகப்படாமல் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அக்கடிதத்தில் நாட்டாரவர்கள் கையொப்ப மிட்டபின்பு, பொக்கிஷதார் கையொப்பஞ் செய்து வைத்துக்கொண்டு, ஷை தொகையைக் கொடுக்கவேண்டும்.

இருபத்தோராவது.

அந்தந்த கிராமங்களில் நடக்கிற கூட்டத்தின் சங்கதிகளை, நாட்டில் சரியான ரிகார்ட்டில் பதியவைக்கவும். மற்றக் கிராமங்களுக்கு நாட்டார் உத்திரவின்படி சமாசார கடிதங்கள் தெரியப்படுத்தவும். வேண்டியிருக்கிறதைப்பற்றி, நாட்டாருக்காக ஏற்படுத்தியிருக்கிற குமஸ்தாவுக்கு, நமது மாபில் வசூலாகிற அபராத முதலிய தொகைகளில், நூற்றுக்கு ரூபா ஆறேகாலாக, வருடத்திற்கு ஒருதடவை, பங்குனியாத முடிவில், வரவு செலவு கணக்கைப் பார்த்து ஷை குமஸ்தாவுக்குச் சேரவேண்டிய உபகாரச் சம்பளத்தை நாட்டாருத்திரவின்பேரில் கொடுத்துக் கொண்டுவரவேண்டும்.

ஷை குமஸ்தா கணக்குகளையும், ரிகார்டுகளையும் அப்போதைக் கப்போது, கிரமமாகப் பதிவுசெய்து வருவதோடு, நாட்டார் உத்திரவுப்படிக்கு அவருடன் கலந்து வேலைகளை ஆலஸிய மில்லாமல் நடத்திக்கொண்டு வரவேண்டும்.

மேற்படி குமஸ்தாவால் வேலை தடையாகும்பட்சத்தில், அவருக்கு சொற்ப அபராதம்போட நாட்டாருக்கு அதிகாரம் உண்டு.

இருபத்திரண்டாவது.

நமது மாபில், பத்தூருக்காவது, உள்ளூர்களுக்காவது சொல்லிச் செய்யும் சுபாசுபங்களில், தலைமை நாட்டுக்கு மரி

யாண்டையாகிய நாட்டுத் தாம்பூலத்தை சபைத் தாம்பூலம் வைக்கும் போதே வைத்து விடவேண்டும். பிரயோஜனக் காலங்களில், தாம்பூலம் சபையில் நடத்த வேண்டியபோது, நாட்டுப் பெரியதனக்காரர்கள் அந்தந்த உள்ளூர் பெரியதனக் காரர்களை உதவியாக வைத்துக்கொண்டு நடத்திவரவேண்டும். ஒருவேளை, நாட்டுப் பெரியதனக்காரர்கள் வராமலிருந்தால், உள்ளூர் பெரியதனக் காரர்களே மரியாதைகளை நடத்திவர வேண்டும். ஏதோ அசந்தற்பத்தால் அவர்களும் வராமற் போகும்படி நேரிட்டால், சபையாருடைய அநுமதியின் பேரில், அவ்விடம் வந்திருக்கும் நம்மவர்களில் ஒருவரைக் கொண்டு டை மரியாதைகளை நடத்திவரவேண்டும்.

அந்தந்த கிராமங்களில் நடக்கும், சுபாசுபங்களுக்கு உள்ளூரார் மனைவட்டமாய் வரவேண்டும். யாரும் தகுந்த காரணமில்லாமல் நிற்கக்கூடாது. வெளிகிராமங்களில் நடக்கும் சுபாசுபங்களுக்குக் கூடியவரையில் பத்துபேரும் போயிருந்து நடப்பிக்க வேண்டும்.

கலியாண காலங்களில், கிராமங்களுக்குத் தாம்பூலம் வைப்பவர்கள் முதலில், நாட்டுக்குக் கொண்டுபோய் நாட்டாரவர்களிடம் தாம்பூலம்வைத்து, அவர்களுத்திரவுப்படி அந்த உள்ளூரில் தாம்பூலம் வைத்தானபின்பு, மற்றக் கிராமங்களுக்குப் போய் அந்தந்த பெரியதனக் காரர்களுக்கு முன்னதாகத் தாம்பூலம் வைத்து, அவர்கள் மூலமாக நீங்கியிருக்கிறவர்களை தெரிந்துகொண்டு, மற்றவர்களுக்குத் தாம்பூலம் வைக்கவேண்டும். வீடுகள் தெரியாவிட்டால், பெரியதனக் காரர்களைக் கேட்டுக் கொண்டு போய் வைக்கவேண்டும். அவ்விதம் செய்யாதவர்களைக் குறித்து அந்த பிரயோசன காலத்தில் யாராவது வந்து சபையில் தெரிவித்தால், அதற்குத்தக்கபடி உத்திரவு சொல்வதோடு, சபையாரால் விதிக்கப்படும் ஏற்பாட்டுக்கிணங்கி நடக்க வேண்டும்,

சென்னபட்டணம் முதலிய விடங்களில் இருக்கும் நம்மது மரபார் வேறே வீட்டிற்குக் குடித்தனம் போவதாயிருந்தால், உடனே அந்தக் கிராம பெரியதனக் காரர்களுக்கு தாங்கள் குடித்தனம் போகும் தெருவின் வீட்டு நெம்பரை, பரிஷ்காரமாய் தெரிவித்துவிட்டுப் போகவேண்டும், அவ்

விதம் தெரிவிக்காதவர்கள் தங்களுக்கு சுபாசுபங்கள் சொல்லவில்லையென்று பிரியாது செய்வது பிரயோஜனப்படாதென்பதை யாவரும் கவனித்து நடக்கவேண்டும்.

இருபத்துமூன்றாவது.

இப்படிக்கு நேரிடும் சுபாசுபங்களுக்கு, திருவொற்றியூரிலிருக்கும் நமது மரபார் மடத்திற்கு சபைதாம்பூலம் வைக்கும்போதே கலியாணம் ஒன்றுக்கு பிள்ளை வீட்டுக்காரர் ரூபா அரையும், பெண்வீட்டுக்காரர் ரூபா அரையும், மற்ற பிரயோசனங்கள் ஒவ்வொன்றுக்கு ரூபா காலும், பெரிய தனக்காரரிடத்தில் கட்டணம் கட்டிவிடவேண்டும். இப்படிக்கு வசூலாகிற தொகையை, உடனுக்குடனே பொக்கிஷதாரரிடம் பெரியதனக்காரர் அனுப்பிவிடவேண்டும். பிரயோசன காலங்களில், ஷை மடத்துப் பண்டாரம் வந்திருந்தால், அவருக்கு வழக்கப்படி ஒரு பெரிய பணம் அதாவது, இரண்டரை அணா பிரத்தியேகமாகக் கொடுத்து விடவேண்டும். ஷை பண்டாரம் வராவிட்டால், ஷை தருமமடத்துக்கு ஷை பெரியபணத்தைச் சேர்ப்பித்து விடவேண்டும்.

இருபத்துநான்காவது.

இவ்வித பிரயோசனங்களில், எல்லோருங் கூடிய சமையம் ஒத்துக்கொண்டதென்கிற அநுகூலத்தால், அந்த பிரயோசனத்தின் மரியாதைகளை நடத்தாமல், எவ்வித விவகாரத்திலும் பிரவேசிக்கக் கூடாது. அவசியமாகத் தோன்றினால், நாட்டாராவது, பெரியதனக்காரராவது, அந்தப் பிரயோசன மரியாதைகளை நடத்திவிட்டு, அப்போதே கூட்டஞ் சொல்லி வேறிடத்தில் கூடி விவகாரத்தை முடிவுசெய்து, அது சங்கதிகளை அங்கு வராதவர்களுக்குத் தெரிவித்து விடவேண்டும்.

இருபத்தைந்தாவது.

நமது மரபாருக்குள்ளாக யாருக்காவது, கொடுக்கல் வாங்கல், சண்டைமுதலிய துவேஷமுண்டாகி, கோர்ட்டு, போலீசு முதலிய இடங்களுக்குப்போய் செலவு செய்து, நஷ்டமும், கஷ்டமும் அவமானமும் அடைவதைப் பார்க்கிலும்,

அந்தந்த கிராமப் பெரியதனக்காரரிடம் பிரியாது செய்து கூட்டச் செலவைக் கொடுத்து, வாதி, பிரதிவாதிகள் வாக்கு மூலங்களைக் கேட்டு, பெரியதனக்காரர்கள் உண்மைக்குத்தாரமாய்சாக்ஷிகளை விசாரித்து தக்கதீர்மானம் பெற்றுக்கொள்வது மிகவும்யுக்தமாயிருக்குமென்பதை யாவரும் கவனித்து நடக்க வேண்டும்,

இருபத்தாறாவது.

நமது மாபாருடைய கலியாண முதலிய பிரயோசன காலங்களில், பலபேர் வந்து கூடியிருக்குஞ் சமையத்தில் யாதாமொருவர் சாதிகட்டுப்பாட்டுக் கடங்கியிராமல், நிஷ்காரணமாக அவ்விடத்தில் கலகங்களை யுண்டாக்கினால், உடனே தனியிடத்தில் கூட்டங்கூடி அந்தப்பிரயோசனத்தில் வந்திருக்கும் மாபார்முன்பாக, நாட்டார், அல்லது, பெரியதனக்காரர் கலகஞ்செய்தவரை திரவிசாரித்து அதற்குத்தக்க யேற்பாட்டைச் செய்விக்கவேண்டும்.

மேலும், சபையாருக்குத் தாம்பூலம் நடந்துக்கொண்டிருக்கும் போதாவது, பந்தி போஜனம் செய்துக்கொண்டிருக்கும் போதாவது, யாதாமொருவர் மத்தியில் எழுந்து விடுவார்களாகில், உடனே, அதைக் கண்டவர்கள் பெரியதனக்காரரிடம் தெரிவித்து, அதற்குத்தக்க ஏற்பாட்டைச் செய்விக்க வேண்டும்,

இருபத்தேழாவது.

நமது மாபார் ஒரே வீட்டில் ஏககுடும்பமாய் இருக்கும் பக்ஷத்தில், மகாநாட்டுக் கூட்டங்களுக்காவது, உள்ளூர் கூட்டங்களுக்காவது, அந்தந்த குடும்பத்தில் ஜேஷ்டராயுள்ள ஒருவர் வந்தால் போதுமானதென்று எண்ணப்படும். ஷை குடும்பம் பிரிவினையாகி ஒரே வீட்டிலாவது, வேறிடத்திலாவது, தனிசமுசாரம் செய்து வரும் பக்ஷத்தில், ஷை கூட்டங்களுக்குக் கட்டாயமாக வீட்டுக்கொருவர் தனித்தனி வரவேண்டும்,

ஏனெனில், அந்தந்த சுபா சுபங்களுக்குத் தனித்தனி சொல்லாவிட்டால், ஒப்புக்கொள்ளாதிருப்பது போலவே கூட்டங்களுக்கும் அவ்வாறே தனித்தனி வராவிட்டால் நாட்

டார், பெரியதனக்காரர் விதிக்கும் ஏற்பாட்டிற்கு இணங்கி நடக்கவேண்டும்.

இருபத்தெட்டாவது.

நமது மரபார் செய்து வரும் பிரயோசனங்களை பத்தூராருக்கும் சொல்லி நடத்திவரவேண்டும், அவ்வாறு, சொல்லிச்செய்ய சாத்தியப்படாதவர்கள், தாங்கள் வசிக்கும் உள்ளூராருக்குச் சொல்லி நிறைவேற்றிக் கொள்ளல் வேண்டும்.

எவ்வித பிரயோசனங்களைச் செய்யவேண்டியதானாலும், அந்தந்த ஊர் பெரியதனக்காரர் மூலமாகவே பணிசெய்வோரைக் கொண்டு சொல்லவேண்டுமேதவிர, தாங்களே பத்தூருக்காவது, உள்ளூருக்காவது, தனித்தனியாவது, ஏக தேசத்தில்பணிசெய்வோரைக் கொண்டு சொல்லிச் செய்விக்க அதிகாரமில்லையென்பதைக் கவனித்து நடக்கவேண்டும். மீறி நடப்பவர்கள் சபையாருக்கு உத்திரவு சொல்லவேண்டும்.

இருபத்தொன்பதாவது.

நமது மரபைச்சார்ந்த யாவராயினும், பொதுவாக ஆலயம், கல்விச்சாலை, மடம், சத்திரம், தண்ணீர்ப்பந்தல், பூப்பந்தல் முதலிய தர்மங்களைச் செய்ய முன்வருவார்களாகில், நமது பரிவிலுள்ள நாட்டார், பெரியதனக்காரர் முதலிய யாவரும் மன ஒத்துமையுடன் ஒன்று சேர்ந்து ஷை தர்மங்களை விர்த்திக்குக் கொண்டுவரும்படியான முயற்சிகளைத் தேடவேண்டும்.

மேலும், யாராவது, நமதுமரபாருக்கே மேற்கண்ட தரும விசாரணைகளின் மேற்பார்வையைச் செய்துவர அதிகாரங்களை சிலாசாசன முதலிய ரிகார்டுகளினால், ஏற்பாடுசெய்தாலும், செய்வித்திருந்தாலும், அதை யாவரும் கவனித்து நடத்திவர வேண்டும். அவ்வித ஏற்பாட்டை அனுசரித்து ஷை தர்மங்களை முன்னின்று நடத்திவருவோர், வருடத்திற்கொருமுறை அதன் வரவு செலவு முதலிய கணக்குகளை வேண்டும்போது, அந்தந்த உள்ளூர் கூட்டத்திலும், பகாநாட்டுக் கூட்டத்திலும், கொடுத்துக் கொண்டு வரவேண்டும். அதற்கிணங்காதவர்களைக் கண்டித்து உடனே, ஷை தர்மங்களை நல்ல

நிலைமைக்குக் கொண்டு வரும்படியான முயற்சிகளைத் தேட வேண்டும்.

நமது மரபார், திருமயிலாப்பூரில் ஸ்ரீகபாலீஸ்வரர் பிரமோற்சவகாலத்தில், ஈசானிய மூலையில் கெடிக்காலமாகப் போடும் பூப்பந்தல், தண்ணீர்ப்பந்தல், தருமங்களுக்கு ஷை மயிலாப்பூரில் நடக்கும் கலியாணங்களில், ஷையூர் வழக்கப்படி பிள்ளை விட்டுக்காரரும், பெண்விட்டுக்காரரும், தனித்தனி ரூபா அரை கொடுத்துவருவது போலவே, அயலூரிலிருந்து நமது மரபாரில் யாவராயினும், ஷை மயிலாப்பூரில் வந்து கலியாணஞ்செய்து கொண்டால், அவ்வாறே அரைரூபாய் கொடுத்துவிடவேண்டும். அந்த உள்ளூர் மரபாரிடம் வசூலாகும் அபராதத்தொகையில், ஒரு ரூபாய்க்குட்பட்ட தொகையை மேற்படி தருமத்திற்கே உபயோகித்து வரவேண்டும். ஒரு ரூபாய்க்கு அதிகப்பட்ட தொகையைப் போக்கிஷதாரரிடம் சேர்ப்பித்துவரவேண்டும்.

ஷை மயிலாப்பூரிலிருக்கும், நமது மரபார் ஷை தருமத்திற்காகத் தலைகட்டுவரி மாதம் ஒன்றுக்கு அணு(2) ஆக ஒப்புக்கொண்டிருப்பதைப் பிரதிமாதம் முதலில் வரும் ஆதிவார தினம், பெரியதனக்காரர் உள்ளூர் கூட்டம் போட்டாவது, ஆள்மூலமாயாவது வசூல்செய்து பதிவுபுத்தகத்தில் கொடுப்பவர்கள் பெயரால், வரவுவைத்துக்கொண்டு வரவேண்டும்.

ஷை உற்சவகால சமீபத்தில், ஷை தருமங்களை பெரியதனக்காரரும், மற்றமரபாரும் கலந்து நடத்திவரவேண்டும். ஷை உற்சவம் முடிந்தவுடனே உள்ளூர் கூட்டம்போட்டு பெரியதனக்காரர் வரவு, செலவு, இருப்பு முதலிய கணக்கு விவரங்களை யாவருக்கும் தெரிவித்து வரவேண்டும். மகாநாட்டுக் கூட்டங்களிலும், கணக்கை ஆஜர்படுத்தி வரவேண்டும். மீதி கையிருப்புத்தொகையை பெரியதனக்காரர் அந்த ஊர் தருமத்திற்கே மூலதனமாக இருவர் பெயரால் சேவிங்க்ஸ் பாங்கியில் கட்டி அந்தபுத்தகத்தை பெரியதனக்காரரிடம்கொடுத்துவைக்க வேண்டும்.

முப்பதாவது.

நமது மரபாரைச்சேர்ந்த பொது தரும விஷயமாக ஆலோசித்துச் சென்ற சார்வரி ஞூ ஐப்பசிமீ திருவொற்றி

யூரில் கூடிய மகாநாட்டுக் கூட்டத்தில், பத்தூரார் அபிப்பிராயப்படிக்கு ஏற்பாடான முழுதலைக்கட்டு ஒன்றுக்கு, மாதம் அரை அணா விகிதம் வருடத்திற்கு அணா 6-ம், அரை தலைக்கட்டு ஒன்றுக்கும், தாரமிழந்தவர்களுக்கும் வருடத்திற்கு அணா 3-ம், அந்தந்த ஊர் பெரியதனக்காரர் பிரதி தைமாதம் சங்கராந்தி பண்டிகை தாம்பூல காலத்திலாவது, அல்லது, பங்குனிமாதத்துக் குள்ளாகவாவது கட்டாயமாக வசூல் செய்து பொக்கிஷதாரரிடத்தில் செலுத்தி, இரசீது பெற்றுக் கொள்ளல்வேண்டும்.

இராக்ஷஸஹு ஆனிமாத முதல் இதையாவரும் அனுசரித்து நடக்கவேண்டும். சென்னையிலும், திருமயிலையிலும் வசிக்கும் பெரியதனக்காரர்கள் நமது மரபார் சங்கராந்தி தாம்பூல காலத்திலும், மற்ற கிராமத்தாரிடம் மாசூல்காலமாகிய பங்குனி மாதத்திற் குள்ளாகவும் சரியாய் வசூல்செய்து பெரியதனக்காரர்கள் பொக்கிஷதாரரிடம் அனுப்பி இரசீது பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

மேற்கண்ட மாதங்களுக்குள்ளாக ஷை தொகை வந்து சேராதகிராமத்தாரைப்பற்றி பொக்கிஷதாரர், நாட்டாருக்குத் தெரிவிக்கவேண்டும். உடனே நாட்டார் அந்த கிராமத்திற்குப் போய் உள்ளூர் பெரியதனக்காரரைக் கொண்டு கூட்டம் போட்டு வசூலிக்கப் படவேண்டும். இதற்குத் தடைசொல்பவர்களை ஷை கூட்டத்தில் விசாரித்து ஷை சட்டத்திற்கு மீறி நடப்பவர்களுக்கு நாட்டார் அபிப்பிராயப்படி விதிக்கும் ஏற்பாட்டுக் கிணங்கி நடக்கவேண்டும்.

முப்பத்தோன்றாவது.

நமது மரபில் வசூலாகும் அபராதம், கட்டணம், முதலிய தொகைகளையும், பொக்கிஷதார் மூலமாக வசூலாகும் பாக்கித்தொகைகளையும், பாதுகாக்கிறதற்காக மகாநாட்டுக் கூட்டத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் டிரஸ்டிகள் பேரால், அப்போதைக் கப்போது சேவிங்ஸ் பாங்கியிலாவது, அல்லது, போதுமான ஈட்டின் பேரிலாவது, வட்டிக்குக் கொடுத்து சரியான கணக்கு வைத்து வரவேண்டும்.

வேண்டும்பொழுது மகாநாட்டுக் கூட்டத்தில் வைகுஜன முன்பாக கணக்கை ஆஜர்படுத்தி வரவேண்டும், திருவொற்றி

பூரிலிருக்கும் நமது மராபாருடைய மடம் முதலிய பொது தருமத்தை விர்த்தி செய்வதற்காக நாட்டாரவர்கள் உத்திரவின்பேரில் வேண்டிய தொகையை டிரஸ்டிகள் கொடுத்து கணக்கு வைத்துக்கொண்டு வரவேண்டும்.

முப்பத்திரண்டாவது.

இந்த சட்டத்தில் ஏற்படுத்திய படிக்கு விவகாரங்களைக் கிரமமாக நடத்துவதற்கு நாட்டாரவர்கட்கே சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், அவர்கள் தங்களுடைய மேலான அந்தஸ்தைத் தெரிந்துகொண்டு, அந்த மரியாதைக்குத் தாழ்வு வராமலும், நமதுமரபுக்கு எந்த காலத்திலும் குறைவு நேரிடாமலும் இருக்கும்படியாக எல்லாவிவகாரங்களையும் உண்மையறிந்து நியாயமாக நடத்திக்கொண்டு வரவேண்டும்.

எந்த காலத்திலாவது, நாட்டாருடைய நடக்கை ஜாதி கட்டுப்பாடு தவறி நம்முடைய மரபுக்கு குறைவு வருகிறதாகத்தோன்றுமாகில், அந்த காலத்தில்,மற்ற பெரியதனக்காரர்களும், மற்ற மராபாரும் யோசித்து மகாநாட்டுக் கூட்டம் வைத்து, அதில், நாட்டாருடைய தவறுதல்களைக் குறித்து விசாரித்து, அவர்கள்பேரில் குற்றம் ஸ்தாபிதமானால், அவர்களை மஹாநாட்டுக் கூட்டத்தில் நீக்கி, சமூகத்தாருடைய அபிப்பிராயப்படிக்கு நடத்துவதோடு, வேறேதக்க கல்வி, அறிவு, ஒழுக்கமுடையவர்களாகப் பார்த்து, ஷை நாட்டுப் பெரியதனத்தைக் கொடுத்து, எல்லாவிவகாரங்களையும்,அவர்களுத்திரவின்படி யாவரும் நடந்துக்கொள்ளல் வேண்டும்.

முப்பத்திமூன்றாவது.

நமது மராபார் வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திலிருக்கும் பெரிய தனக்காரர், தங்களிடமிருக்கும், உள்ளூர் கூட்டத்தின் விவகார பதிவு புத்தகங்களும், நாட்டிலிருந்து வரும் கடிதங்களும், மராபார் கொடுக்கும் மனு முதலிய பிரியாது ரிகார்டுகளும், சாக்கிரதையாக வைத்துக் கொண்டு நாட்டாருக்கு வேண்டும்போது ஆஜர்படுத்தி வரவேண்டும்.

நாட்டாரும், மகாநாட்டுக் கூட்டத்தின் பதிவு புத்தகங்களும்; பத்தூரிலிருந்து வரும்கடிதங்களும் பிரியாது மனுமுத

ஷிய ரிகார்டுகளும் சாக்கிரதையாக வைத்துக்கொண்டு நமது மரபார் பத்தாராரும்வேண்டும்போது ஆஜர்படுத்திவர வேண்டும்.

எவ்வித காரணங்களினாலாவது, ஷை பெரியதனக்காரரும், நாட்டாரும், தங்கள் அதிகாரஸ்தானத்தை விட்டு நீங்கும்போது, அந்த ஸ்தானத்திற்கு ஏற்படுகிறவர்களிடத்தில், மேற்கண்ட யாவற்று ரிகார்டுகளையும் நமது மரபார்முன்பாக உடனே ஒப்புவித்து, அதற்கு இரசீதும் பெற்றுக்கொள்ளல் வேண்டும், சுபம்.

விவகாரதருமம்-முற்றிற்று.

—:)o(:—

உ

ஸ்ரீ சற்குரு துணை.

ஆசாரதருமம்.

இவ்வுலகின்கண் பலவகை சாதியாருக்குள்ளாக, உயர்குலத்தோரென்றும், இழிகுலத்தோரென்றும் ஏற்பட்டிருப்பதற்கு ஆசாரமே காரணமாகவிருக்கின்றது. அதன் பெருமையும், சிறப்பையும் குறித்து திருவள்ளுவநாயனார் திருக்குறளில்,

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்" என்றும்,
"அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு" என்றும்,
"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்" என்றும் கூறியுள்ள

கருத்தாவது, ஆசாரமுடைமை உயர்குலமும், அஃதில்லாமை இழிகுலமுமாம் என்பதும், பொறாமை யுள்ளவனிடத்துச் செல்வமில்லாமை போல, ஆசார மில்லாதவனிடத்து மேன்மையில்லையென்பதும், ஆசாரமானது, தருமத்திற்குக்காரண

மாகும். தீயவாசாரமானது, இம்மையிலும், மறுமையிலுந்
துன்பத்தைக் கொடுக்கும் என்பதை விளக்கு கின்றமை
யால், நமது உயர்குலமாகியவேளாளருக்குரிய நித்திய கரும
விதியாவது, சூரிய உதயத்திற்குமுன் நித்திரை நீங்கி எழுந்து
விபூதி துளணம்தரித்து சிவபெருமானைத் தியானித்துப் பின்
மலஜல உபாதிகளைக் கழித்து சௌசஞ் செய்து தந்தசுத்தி
செய்த பின்பு, குளித்து தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்து,
காலையில் கிழக்குத்திக்கும், மாலையில் வடக்குத்திக்கும், நோக்
கியிருந்து விபூதிசந்தணமணிந்து சிறிதுநேரம் அவரவர் இஷ்
டதெய்வத்தைச் சிந்தனை செய்து, இயன்ற ஆகாரங்களைப்
புசித்து தங்கள் தங்களுக்குரிய தொழின் முறைமையைச்
செய்து வரவேண்டும்,

1-வது, எல்லா ஜீவராசிகளிலும், மேலாகிய மனிதப்பிறப்
பைப் பெற்றுக் கொண்டவர்கள், இந்தப் பிறவியினால்
அடையத்தக்க பிரயோசனத்தைக் காலமுள்ள போதே
யறிந்து அடையவேண்டும். ஒருவருக்கும் தீங்கினைச்செய்
யலாகாது. இதற்காகத் தாயுமான சுவாமிகளும் "இப்
பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ ஏதுவருமோ
வறிகிலேன்" என்று கூறியுள்ளா ராகையால், நமதுமா
பார்யாவரும் தங்கள் சிறுவர்சிறுமிகளைக் கல்வி, கேள்வி
சற்சங்கவாச முதலிய நன்னடக்கையிற் பழகிவரச்
செய்தல் வேண்டும். அதனால், மாதா, பிதா, குரு, சுற்ற
முதலிய பெரியோரிடத்தில் அன்பும், சிவாலய சேவை,
சிவனடியார்க்குத் தொண்டு, சிவபுராண படனஞ் செய்
தல், பக்தி, விசுவாசமுதலிய நன்னடைக்கைகளுக்கு
மார்க்கம் உண்டாகும். மேலும், அவரவர்கள் சத்தியா
நுசாரம் தர்மமும், பரோபகாரமும் செய்துவர வேண்
டும். ஏழைகளிடத்தில் இரக்கமும், இல்லந்தேடி வருப
வர்களுக்கு இனிய முகங்காட்டி, இன்சொல்கூறி இயன்
றளவு அன்னமிட்டுக் கொண்டும் வரவேண்டும்.

2-வது, "காவல்தானே பாவையர்க்கழகு" என்னும் மூது
ரைக் கிணங்க, ஸ்திரீகளுடைய பதிவிரதா தன்மைக்குரி
யது அவர்கள் கற்பே யாதலால், தங்கள் கணவர்களில்
லாத காலத்தில் வீட்டில் வரும் பாலர், விருத்தர் தவிற,
இதர புருஷர்களுடன் நேரில் வார்த்தை சொல்வதும்,

அண்டை அயலார் வீடுகளிற் போய்ப் பேசுவதும், தெருவாயலில் நிற்பதும், தனிமையா யெங்குந் திரிவதும் கூடாவாம்.

காசிகாண்டம்:—

"கொழுநன் உண்டபின் தாநுகர் கொள்கையும்
விழி துயின்றபின் துஞ்சலும் மென்துயில்
எழுதல் முன்னம் எழுதலுமே யன்றோ
பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே",
"எய்தும் இற்றுறந் தேகிலர் இல்லகல்
தையலார் முகங் காணினும் சாம்புவார்
மையல் காதலர் வந்தேவை யாயினும்
செய்தி ரென்றலும் செய்தன மென்பரால்"

இவைகளின் கருத்தாவது;—தங்கள் புருஷர் உண்டபின் தாமுண்பதும் அவர்கள் உறங்கியபின் தாமுறங்குவதும், நித்திரையிலிருந்து அவர்கள் எழுவதற்குமுன் தாமெழுவதும், தாம் அயலார் வீட்டுக்குப்போக விரும்பாமையும், அப்படிப் போகும் பெண்களைப் பார்த்தால் கோபிப்பதும், தங்கணவர் எதையாகிலும் செய்யச் சொன்னவுடன் செய்தோமென்று சாக்கிரதையாய்ச் செய்து முடித்தலும் குற்றமற்ற பதிவிரதா ஸ்திரிகளின் செய்கைகளான படியால்; இதையறிந்து நடப்பதே நற்குல மாதர்களுக் கழகாகும்.

3-வது, நம்மவர்கள் போஜன முதலானவைகளைத் தகுதியற்றவர்களிடத்தில் புசிக்கப்படாது. அவர்களுடன் கூட ஒரே வீட்டில் குடியிருக்கவும் கூடாது,

நாலடியார்:—

"தன்னுடம்பி னூன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க" என்பதின் கருத்தாவது:—பசியினால், தன்தேக மழிந்து விடுவதாயினும், இழிவானவர்கள் கைபோஜனத்தை புசிக்கப்படாதென்பதாம்.

4-வது, நமது மரபின் பிரயோசன காலங்களில், அன்னியர் தாம்பூலபோஜனாதிகட்கு ஒத்துக்கொள்வது வழக்கமா

யிருக்கிற படியால், அந்த காலங்களில், அவர்களுக்குத் தாம்பூல மரியாதை முதலில் நடத்திவருகிற வழக்கப் படியே போஜனத்தையும் அவர்களுக்கு முன்னதாக நடத்திவிட்டுப் பின்பு, நம்மவர்கள் பிரத்தியேகமாயிருந்து போஜனஞ் செய்யவேண்டு மென்பதை கூடியவரையில் கவனித்து நடக்கவேண்டும்.

5-வது, கட், காமம், கொலை, களவு, பொய் என்னும் பஞ்சமா பாதகங்களைச் செய்யலாகாது. யாராவது தவறிச் செய்வார்களாயின், நாட்டார், அவர்கள் சரியாய் நடந்து கொள்ளுகிறவரையில், நமது மரபினேற் பாட்டின் படி நடத்தி, சுபா சுபங்களில் யாவரும் விலகியிருக்க வேண்டும். எப்போதும், இச்சட்டத்தின் விவகார ஆசார தருமஏற்பாட்டில் சொல்லியிருக்கிற விதிப்படிக்கு, அந்தந்த ஊர் பெரியதனக்காரரும், நாட்டாரும், மரபார் நடவடிக்கையில் கண்ணோக்கம்வைத்து வரவும். சுபம்.

☞ இந்தஉபவிதியாகிய சட்டத்தில், நூதனமாக சில சேர்க்கவாவது, சீர்திருத்தஞ் செய்யவாவது, மெ மரபாருக்கு அபிப்பிராயந் தோன்றுமானால், மகாநாட்டுக்கூட்டஞ் சேர்ந்து ஆலோசித்துச் செய்துகொள்ளலாம்.

விவகார, ஆசார தருமம்
சம்பூரணம்.

—:}o(:—

வாழ்த்து - விருத்தம்.

ஆழிதரித் தோனுமல ரயனுந் தேவர்க்
  கரியவுமா பதிசரண கமலம் வாழி
ஊழின்முறை யாலரசன் செங்கோ லோங்கி
  யுலகெலாஞ் செழிக்கவான் சொரிந்து வாழி
மேழியாற் செல்வமிகும் வேள்வி யாளர்
  மேன்மைசெறி கைபுக ழென்றும் வாழி
சோழியவே ளாளரெனு மரபார் சட்டத்
  தலங்கநன் கோதிவரு பவரும் வாழி.

உ

சிவமயம்.

தொண்டைமண்டலம்

சோழிய வேளாளர் மரபு

தர்மசங்கம்.

——):o(:——

இந்த உபவிதியாகிய சட்டபுத்தகத்தில், கண்டிருக்கிற சோழிய வேளாள மரபார், தங்களைச்சேர்ந்த கல்விச்சாலை, சத்திரம், மடம் முதலிய தர்மங்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, நிகழும் 1915௵ ஏப்ரல்௴ 26௳யில், இந்தியா கவர்ன் மெண்டின் 1860௵த்து 21-வது ஆக்ட்டின் படி தொண்டைமண்டலம் சோழிய வேளாளர்மரபு தர்மசங்கம் எனப் பெயர்வழங்க சென்னையில் ரெஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது. ஷை ரெஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கும் சங்கத்தின் யாதாஸ்தும், விதிகளும், நிபந்தனைகளும் புத்தகரூபமாக அச்சியற்றப் பட்டிருக்கிறது.

அதையும், ஷை மரபின் பூர்வ உபவிதியாகிய சட்டத்தையும் அச்சிட்டிருப்பதால், ஷை மரபார் ஒவ்வொருவரும் ஷை சங்கத்தின் தலைவர்களிடம், அதற்கு விலை அணா(2) கொடுத்து பெற்றுக்கொண்டு, அதிற் கண்டிருக்கும் விதிப்படி நடந்துக்கொள்வது முறைமையாம்.

மேற்படி சங்கத்தார் பொதுப்பணத்தைக் கொண்டு, 1915௵ ஏப்ரல்௴ 27௳யில், திருவொற்றியூர் தியாகராஜப் பெருமான் கீழண்டை மாடவீதி மேலண்டை வாடையில், 542-வது கதவிலக்கமுள்ள விடுமனையை ஷை சங்கத்தின்பெயரால் வாங்கி செம்பியம் சப்ரெஜிஸ்தர் ஆபீஸில் ரெஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது. ஷை இடத்தில், சோழிய வேளாளர்மரபு தர்ம சங்கத்தார், மகாநாட்டுக் கூட்ட முதலியவை கூடுவதற்கு அனுகூலமாயிருக்குமென்பதை மரபார் யாவரும் கவனித்து வரவேண்டும். சுபம்.

ஸ்ரீ சற்குரு திருவடி வாழ்க.

1915௵ ஜூன்௴.

வேளாளருக்குப் பதினெட்டு விருது.

1. வெள்ளைப் பூச்சக்கரக்குடை
2. வெள்ளை நிசாணி.
3. சுருட்டி.
4. சாமரம்.
5. திருச்சின்னம்.
6. அருகுதீவர்த்தி.
7. அலப்படை.
8. சித்திரமேழிக்கொடி.
9. எடுகோல் நிசாணி.
10. சிங்கக்கொடி.
11. ஜெயமணி சலவாதிமுத்திரை.
12. குயில் நிசாணி.
13. கிளிநிசாணி.
14. ஆலவட்டம்.
15. பெரியபேரி.
16. பசுந்துவளைத்தார்.
17. ஆத்தித்தார்.
18. தவண்டை.

மேற்படி விருது பதினெட்டும், கரிகாலச்சோழனால், வேளாளருக்குக் கொடுக்கப் பட்டதாகத் தெரியவருகிறது. தமிழ் நாட்டரசருக்கும் விருது இருபத்தொன்றாம். அதைத் தொகையகராதியிற் காண்க.

இளங்கோக்களாகிய

வேளாளருக்குப் பதினெட்டு பரிவாரம்.

1. நாவிதன்.
2. குயவன்.
3. வண்ணான்.
4. ஓச்சன் = கணக்கன்.
5. கொல்லன்.
6. தச்சன்.
7. தட்டான்.
8. கன்னான்.
9. சிற்பி.
10. செக்கான்.
11. இலைவாணியன்.
12. எருக்குவாணியன்.
13. மாலைக்காரன் = சாத்தானி.
14. பாணன் = தையக்காரன்.
15. பள்ளி.
16. வலையன்.
17. இடையன்.
18. பறையன்.

கோக்களாகிய அரசருக்கும், பதினெட்டு பரிவாரம் உண்டு.

வேளாளர் பூர்வம் அரசாண்டது.

வேளாளராகிய ஏகம்பவாணர் மகதநாட்டரசர்.
ஷை காளத்திவாண முதலியார் திருமின்னையூர்க்கரசர்.
ஷை வயிரப்பமுதலியார் பல்குன்றக்கோட்டமெய்யூரரசர்.

ஷை சந்திரசேகரவாணமுதலியார்சேறையூர்க்கரசர்.
ஷை *ஏகப்பவாணராகிய பிரபு ஆற்றூர்க்கரசர்.
ஷை களப்பாளன் என்னும் முதலியார் ஆலூர்க்கரசர்.

இதற்குப்பிரமாணம்.

தொண்டைமண்டல சதகம்.

மோதிச் சிவந்த கவிகாள மேக மொழிந்த வெண்பாப்
பாதிக்கு முந்திப் பரிசளித் தோன்களப் பாளனென்று
மாதிக்கம் பெற்றால ஆலூர் முதலி யாசிருப்ப
மாதிக் கெலாமபுகழ் இன்றதொல் சீர்தொண்டை மண்டலமே.

என்று கூறியிருத்தலால், மேற்கண்டவர்களைப்போலவே பல வேளாளர் அரசாண்டதாகத் தெரியவருகிறது.

ஒளவையார்-நீதிவாக்கியம்.

சிரைத்தேடின்-ஏரைத்தேடு,
மேழிச்செல்வங் கோழைபடாது என்றும்,

கம்பர்-தனிவெண்பா.

மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர் நோக்குங்கை
ஆழி தரித்தே யருளுங்கை-சூழ்வினையை
நீக்குங்கை யென்று நிலைக்குங்கை நீடூழி
காக்குங்கை காராளர் கை. என்றுங்

கூறியதுணர்க.

மூவேந்தராகிய சேர சோழ பாண்டியர் ஆளுகைக்காலத்தும், வைசியராகிய வேளாளர் பல சிற்றரசர்களாகவும், மந்திரி, சேனாதிபதி உத்தியோகம் வகித்தும், அரசருக்கு முடிசூட்டியும், அரசுரிமையைக் கொடுத்தும், அரசனை ஓர்தட்டிலும், பொன்னையோர் தட்டிலும் இட்டுப்பார்த்தலாகிய துலாபாரந்தாங்கலாதி மேன்மையைக்கொண்டு விளங்கியிருந்தவேளாளர்களை மநுமுதலிய தர்ம சாஸ்திரங்களில் வைசியரென்றே நிர்ணயித்திருக்கின்றன.

---

* இக்குறிப்புள்ள வேளாளஅரசர், பாண்டியனை ஓர்காலத்தில் பூதத்தைக்கொண்டு பிடித்து சிறையிலிட்டுப் பின்பு, பாண்டியன் மனைவி வேண்டுதலுக் கிரங்கி சிறை விடுத்தவரென் றறிக.

இதன் உண்மையை அறியாத சிலபிராமணர்களைப்போலவே! சிலவேளாளரும் தம்மைத்தாமே சூத்திரரென்றுகூறிக் கொள்வதும், தெரிந்தவர்கள் வைசியரென்றுகூறுவாராயின், அவரோடு வாதப்போர் செய்வதும் என்னையெனின், சிலகிறிஸ்தவர், ஞானமென்பதின் சப்தார்த்தமே இன்னதென்றறியப்பெறாத தங்களைத்தாங்களே ஞானிகளென்றுமதித்து, இந்துக்களையெல்லாம் அஞ்ஞானிகளெனவழங்கி வருவதைக் கேட்டு வரும் பழக்கமிகுதியால், அதன்சொற்பொருளறியாத சிலர் தம்மைத்தாமே அஞ்ஞானிகளெனக்கூறிக் கொள்வது போலாம்.

இச்சரித்திரத்தில், பொதுவாகவேளாளர் குலமேன்மையைப்பற்றி அநேகபுராணாதி நூல்களால் காட்டியிருக்கும் மேற்கோள்களின் பிரமாணங்களைக் கொண்டு, உண்மையை விளக்கியிருப்பதால், வைசியர் வேளாளரென்பதை யாவரும் கவனித்து மனதில் பசுமரத்தாணிபோற் பதியச் செய்வதே பான்மையாம்.

கம்பர்-ஏரெழுபது.

ஆழித்தேவர் கடலாறு மல்லாத்தேவ ரம்பலத்தார்
ஊழித்தேவர் தாங்கூடி யுலகங்காக்க வல்லாரோ
வாழித்தேவர் திருமக்கண் வையம்புரக்கும் பெருக்காளர்
மேழித்தேவர் பெருமைக்கு வேறுதேவர் கூறேனே.

எனக்கம்பர், வேளாளர் புகழையே மிகவியந்து தேவர்களுக்கொப்பாகக் கூறியிருக்கின்றனர்.

அன்றியும், கீர்த்திவாய்ந்த சோழராஜர்களாகிய முசுகுந்தன், காடுவெட்டியசோழன், கோச்செங்கட்சோழன், புகழ்ச்சோழன், அபயகுலசேகர சோழன், அநபாயச்சோழன் முதலியோர் சிவபத்தி, அடியார்பத்தியிற் சிறந்தவர்களாய், சிவபூசை, சிவாலயப்பிரதிட்டைகள் செய்து மகாபுண்ணிய பலனைப் பெற்றவர்கள். இவர்கள், மகிமையைப்பற்றி சேக்கிழார் பெருமான் செய்தருளிய திருத்தொண்டர் புராணமெனவழங்கும் பெரியபுராணத்தால் விசிதமாயறிந்துணர்க. சுபம்.

இனி, மேற்படி பக்த சிரோன்மணிகளாகிய சோழபூபதிகள், அரசாட்சி செய்துவந்த சோழநாட்டின் சீரும், தொண்டைநாட்டின் சிறப்பும் இதனடியில் வருவதைக் காண்க.

உ

ஸ்ரீ நடராஜப்பெருமான் துணை.

சோழ மண்டலப் பெருமையும்,

தொண்டைமண்டலம்

சோழிய வேளாளர் ஒருமையும்,

விருத்தம்.

ஈழமண்டல முதலென வுலகத்
தென்னு மண்டலத் தெரிபடை வேந்தர்
தாழுமண்டலஞ் செம்பியன் மரபினோர்
தாமெலாம் பிறந் தினியபல் வளத்தின்
வாழுமண்டலங் கனகமு மணிகளும்
வாய்பில் காவிரி குரம்பினிற் கொழிக்குஞ்
சோழமண்டல மிதற்கிணை யாமெனச்
சொல்லு மண்டலஞ் சொல்வதற் கிலையே.

நெடுங்கடல் சூழ்ந்த, புண்ணிய பூமியாகிய, *பரதகண்டத்தில், தென்றிசைக்கண் மிகவுஞ்சிறப்புடையதாய், காவிரியென்னுந் தெய்வத்தன்மை பொருந்திய மகாநதியினால், எக்காலத்திலுங் குறைவுபடாத, நீர்வள முள்ளதாய், வாழை, தென்னை, பலா, மா, கமுகு, கன்னல் முதலிய சோலைகள் சூழப்பெற்றதாய், அணியணியாய்ப் புன்னை, பாதிரி, குருக்கத்தி, அசோகு, சண்பக முதலியபற்பல விருட்சங்கள் செழித்தோங்கப்பெற்ற, வண்டுகள்பாடுகின்ற மலர்ச்சோலைகளும், யாவராலும் வியக்கத்தக்க விசாலமாகிய சாலைகளும், எங்குங்குளிர்ந்த தடாகங்களும், தாமரை, அல்லி, நீலம் முதலிய புட்பமணம் வீசும் நீர் நிறைந்த ஓடைகளும், பொய்கைகளும், குளங்களும், கூபங்களுஞ் சூழ்ந்துள்ளதாய், பலவித நெற்பயிர் மாறாது முப்போகம் விளைகின்ற வயல்கள் நெருங்கியுள்ளதாய், ஆங்காங்கு, தேர்வீதிகளும், யானைக்கூடங்களும்,

---

* பிரமன் படைத்த பற்பல அண்டங்களுக்குள்ளாக - உலோகங்களைத்தான் சிருட்டித்தப் பின், அவைகளைக் காக்கும்பொருட்டு, மநுக்களை சிருட்டித்தனன். அவர்கள் பெயர் வருமாறு:—சுவாயம்புமநு, சுவாரோசிதமநு. வாசவமநு, தாமசமநு. சூரியமநு. ஸாவத

மநு. வைவசுதமநு. தட்சணமநு. அக்கினிமநு. ருத்திரமநு. பவுச்சியமநு. பிரம்மமநு. சடசட்சயமநு. தன்மமநு. ஆகமநு பதினான்கு.

இவர்களில், முதன்மநுவாகிய சுவாயம்பு மநுவுக்கு-அக்கினிதிருக்கு, அக்கினபாகு, மேதாவி, ஜதுஷமான், துதிமான், சன்னர், வசந்தர் என எழுபிள்ளைகள் தோன்றி, கீழேழுலகமான:—அதலம், விதலம், சுதலம், நிதலம், தராதலம், மகாதலம், பாதாளத்துக்கும், மேலேழுலகமான:—பூலோகம், புவலோகம், சுவலோகம், மகாலோகம், ஜனலோகம், தபலோகம், சத்தியலோகத்துக்கு மத்தியிலுள்ள, மகாமேருவைச்சுற்றி லட்சயோசனை விஸ்தாரமாயிருப்பது சம்புத்தீவு, அதைச்சுற்றி லட்சயோசனை விஸ்தாரமாயிருப்பது லவண சமுத்திரம், அதற்கப்பால்-சாவல், குச, கிரவுஞ்ச, சாகர, சான்மா, பிலட்ச, புஷ்கர எனுஞ் சப்ததீவுகளையும், சப்தசமுத்திரங்களையும் அரசாண்டு வந்தார்கள்.

இதில், சுவாயம்புமநு முதற்புத்திரனாகிய, அக்கினிதிருக்குக்கு குரு, இரணியர், அரமியர், பத்திரர், சுவான், பாதன், அரிகேது, மாலி, இளாய் என ஒன்பது பிள்ளைகள் தோன்றி, அக்கினிதிருக்கு ஆண்டுவந்த சம்புத்தீவை நவகண்டமாக்கி தந்தம் பெயரால், வழங்கி முறையாயரசாண்டு வந்தார்கள். அதில், இமயமலைக்குத் தெற்கும், கன்னியாகுமரி நதிவரை நீண்டுள்ளதும், கிழக்கு மேற்குஞ் சமுத்திரஞ் சூழ்ந்திருப்பதுவுமான நாட்டைப் பரதன் ஆண்டபடியினாலே, இதற்குப் பரதகண்டமென்று வழங்கி வருகின்றது. அதையநுசரித்தே பிராமணர்கள், தர்ப்பணை முதலியவை செய்யுங்காலத்தில், அந்தப்பெயர்களையே சொல்லி வருகின்றனர்.

குதிரைப்பந்திகளும், பசுத்தொழுவங்களும், இருஷபக்கூடங்களும், இராஜவச்சாலைகளும், அரசன் கொலுவிருமண்டபமும், அலங்காரமண்டபமும், சாஸ்திரசம்பாஷண மண்டப முதலியவை அமையப்பெற்றுள்ளதாய், சதா பக்தகோடிகள் தரிசிக்கும்படியான திருக்கோபுரங்கள் பிரகாசித்திருக்கும் சிதம்பரம், சீர்காழி, வயித்தீஸ்வரம், மாயூரம், மத்தியார்ச்சுனம், கும்பேஸ்வரம், ஜம்புகேஸ்வரம், பஞ்சநதம், கமலாலயம் முதலிய திவ்ய க்ஷேத்திரங்கள் விளங்குவதும், திருக்கயிலாயபரம்பரையான திருவாவடுதுறை, திருத்தருமபுரம், மற்றுமுள்ள திருப்பனந்தாள், சூரனார்கோயில் முதலிய சைவாதீன மடாலயங்களையும் உடையதாய், இல்லற நெறியில்

வழுவாது, செல்வத்திலும், கல்வியிலும், ஈகையிலும், சிவபக்தியிலும், அடியார்பக்தியிலுஞ் சிறந்த நால்வகை வருணத்தார் வசிப்பதற்கு மனோரம்மியமாயிருக்கும், சோழநாட்டிலே, சூரியகுலத்திலே பிறந்து, அரசாக்ஷி செய்து வந்த சோழராஜாக்களில், தன்னுயிர்போல, எல்லா உயிர்களையும், பாதுகாத்து இதஞ்செய்துவருபவனும் கல்வி, கேள்வி, பக்தி, ஈகை, இரக்கம், வாய்மை, ஒழுக்கமுதலிய நற்குணங்கள் அமையப்பெற்று ஒருகுடைநீழலில், செங்கோல் செலுத்தி அரசாக்ஷி செய்துவந்த, இராஜாதிராஜனென குலோத்துங்க சோழமகாராஜன், ஒருகாலத்தில், தன்னுடையநாட்டிலுள்ள குடிகளும், பயிர்களும், துஷ்டமிருகங்களால், வருந்துவதைக் கேள்விப்பட்டு, வேட்டையாடி வருவேனென்று மந்திரி, பிரதானி, வேடுவர், குறவர், மறவர் முதலானவர்கள் புடைசூழ தண்டகாரணியத்துள் புகுந்து வேட்டையாடி, அநேக மிருகங்களைச் சம்மரித்து, தனது நகரத்திற்குத் திரும்புகையில், பகல் பதினைந்து நாழிகை ஆய்விட்டமையால், தன்னுடன் வந்த சேனைகளை யெல்லாம் ஓர் சோலையி லிருக்கச்செய்து, தானும் தாகசாந்தி செய்து இளைப்பாறியபின், தனக்கெதிரிற் றோன்றிய, ஓர் ஆச்சிரமத்தைக் கண்டு வருவேனென்று, அரசன் தனித்து ஒரு குதிரையின்மீதேறிச் சென்று, ஆங்குள்ள இருஷி நிஷ்டையிலிருக்கக் கண்டான்.

பின்னர், அவருக்குப் பணிவிடை செய்துவரும் மகாரூபவதியாகிய அவர்புத்திரி நாககன்னி யென்பவளைக்கண்டு, அவள் மீது மோகங் கொண்டான். அக்கன்னிகை இதை அறிந்து, எனது தந்தையனுமதியின்றி உம்மைச் சேரேனென்றாள். உனது தந்தை தவத்திலிருப்பதால், இப்போது இடையூறு செய்யப்படாது. நானே இந்நாட்டையாளும் அரசன், உனக்கு வேண்டுவனவெல்லாங் கொடுப்பேன், என்னிஷ்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்கவே, விவாகமின்றி எவ்விதம் உம்மைச் சேருவதென்றாள், உடனே, ஆங்குள்ள ஆதொண்டை புட்பத்தைக்கொய்து மாலையாக்கி அவள்கழுத்திலிட்டுத், தன் விரலிலுள்ள கணையாழிமோதிரத்தை, அந்த கன்னிகையின் விரலிலிட்டுச் சேரத்தொடங்குகையில், எனக்குப் பிள்ளை பிறந்தால், என்ன செய்வீர் என அவள் கேட்க, என்னரசை அப்பிள்ளைக்கு அளிப்பேனெனப் பிரமாணஞ் செய்துகொடுத்து, அவளுடன் சுகித்திருந்தான். பின்னர், போது போனபடியால், மறுபடியும் வருகிறேனென்று

சொல்லி, தன் சேனையுடன் தனதிருப்பிடம் போய்ச்சேர்ந்தான். அப்பால், அரசன் இதை மறந்து, இராஜாங்க காரியத்திலிருந்து விட்டான்.

அந்த நாககன்னியானவள் உடனே கர்ப்பமாகி ஒருஆண் மகவைப் பெற்றாள். தந்தையாகிய முனிவர் நிட்டை நீங்கி நடந்த வர்த்தமானங்களைக்கேட்டுக் களிப்புற்று, அக்குழந்தைக்கு ஆதொண்டன் என நாமகரணஞ்செய்து வளர்த்து வேண்டுமான வித்தைகளெல்லாம் கற்பித்தார். வயதும் இருபது ஆய்விட்டது. இஃதிங்ஙனமிருக்க, இப்பால், சோழராஜன் பிள்ளையில்லாதிருந்து தன் பட்டஸ்திரீயின் கருப்பத்தில் ஓர் ஆண்குழந்தைபிறந்து வளர்ந்துவரத் தனக்குவயோதிகம் நேரிட்டமையால், நாககன்னியை மறந்தவனாய், தனது பட்டஸ்திரீயின் பிள்ளைக்குப் பட்டாபிஷேகஞ்செய்யவேண்டுமென்று ஊர்கள் தோறும் பறையறைவிற்றான்.

இதைச் செவியுற்ற நாககன்னித் தன்பிதாவாகிய முனிவரிடம் அரசன் செய்தியைத் தெரிவித்தனள். அதுகேட்டு முனிவர் தமது பௌத்திரனை யழைத்துப், பூர்வவரலாற்றையுணர்த்தி, அரசனிடஞ்சென்று உன தாய்க்கு அவன் செய்த பிரதிக்கினையின்படி, உனக்குப் பட்டங்கட்டவேணுமென்று கேள். இருபது வருடத்திற்குமுன் நடந்த விஷயங்களை ஒருகால் மறந்திருப்பான். நீ நேரில் கண்டால், அரசைப் பெறுவாயென்று ஞானோபதேசஞ்செய்து, ஆசீர்வதித்தனுப்பினார். ஆதொண்டன் முனிவரையும், தனது தாயாகிய நாககன்னிகையையும் வணங்கி நமஸ்காரஞ் செய்துகொண்டு, குலோத்துங்க சோழனிருக்கும் நகரிற்சென்று தூதுவனைக்கொண்டு, அரசன் சமுகத்தைக்காண தங்கள்குமாரன் ஆதொண்டன் வந்திருக்கிறானென்று தெரிவிக்கச்சொன்னான். அந்தப்படியேசென்று தூதுவன் இராஜசபையில் தெரிவித்தான். அதைக்கேட்ட மாத்திரத்தில், சோழன் திடுக்கிட்டான். மந்திரி முதலானோர் ஆலோசிக்கத் தொடங்கினார்கள். அதில், முதன் மந்திரியானவன் அப்பிள்ளையை நேரில் வரும்படி உத்தரவு செய்யவேண்டுமென, அவ்வண்ணமே அரசன் உத்தரவு செய்தலும், தூதன் ஆதொண்டமாலையைப் பூண்டுள்ள பிள்ளையை எதிரில் கொண்டுவந்து விட்டான்.

ஆதொண்டன், உடனே அரசன் பாதத்தில் விழுந்து நமஸ்காரஞ்செய்து எழுந்துநின்றான். ஆதொண்டனை நோக்கி, நீர் எப்படி அரசன் புத்திரன் என்றீர்? என மந்திரிவிசாரிக்கவும், தன் தந்தையாகிய இவ்வரசன், தண்டகாரணியத்தில் வேட்டைக்குவந்ததும், நாககன்னியாகிய தன்னுடைய தாய்க்கு, ஆதொண்ட மாலையிட்டுக் கணையாழியைத் தரித்துக் காந்தர்வ விவாகஞ்செய்ததும், பிள்ளை பிறந்தால், தன்பட்டத்தை அந்தப்பிள்ளைக்குக் கொடுக்கிறேனென்று பிரமாணஞ்செய்து கொடுத்ததையும், கிரமமாகச்சொல்லி, அந்தக்கணையாழியையுங் காண்பித்தான். சோழனது திருவுருவே, இச்சிறுவனிடத்தில் சொலிப்பதால், இவன்சொல்வதெல்லாம் உண்மையென்று ஒப்புக்கொண்டார்கள். இவைகளையெல்லாம் கேட்டவுடனே, அரசனுக்கு ஞாபகம்வந்து தோன்ற, அச்சிறுவனை யணைத்துக்கொண்டு அருகிலிருக்கச்செய்தான்.

பின்னர், குலோத்துங்க சோழனுக்கு மந்திரியார்கள், உம்முடைய தேசத்தை யிருகூறாக்கி, இரண்டு பிள்ளைகளுக்கும் கொடுப்பதே தருமமென்று சொன்னார்கள். உடனே அரசன், பெண்ணையாற்றின் தென்புறத்திலுள்ள, தென்சோழத்தைப் பட்டஸ்திரீயின் பிள்ளையாகிய விக்கிரம சோழனுக்கும், பெண்ணையாற்றுக்கும், வேங்கடமலைக்குமத்தியிலுள்ள, வடசோழத்தை, நாககன்னியின் பிள்ளைக்கும் கொடுத்து, இருவருக்கும் பட்டம் கட்டி. நாககன்னியின் குமாரனுக்கு ஆதொண்டைப் பெருமானென்று நாமகரணஞ் சூட்டினான், சிலநாளைக்குப்பின் குலோத்துங்க சோழன் காலமானான்.

அப்பால், தன் பிதாவால் கொடுக்கப்பட்டிருந்த, இரத கஜதுரகபதாதிகளாகிய சதுரங்கசேனைகளும், வேண்டுமான திரவியங்களும், மந்திரி பிரதானிகளிற் சிலரையும், பயிர்த்தொழிலில், சிறந்துள்ள சோழநாட்டு வேளாளக் குடிகளையும், துணையாகக் கூட்டிக்கொண்டு, ஆதொண்டன் வடசோழம் வந்துசேர்ந்தான்.

அந்நாள் முதலாக, அவ்வடசோழத்துக்குத் தொண்டைமண்டலமெனப் பெயராயிற்று. அந்நாட்டை, அரசன் நாற்புறமுஞ் சுற்றிப்பார்க்குமிடத்துப் பெரும்பாலும், காடுகளால் சூழப்பட்டு, கொடியவர்களாகிய குறும்பர்களால் வசிக்கப்பட்டிருந்தது. அவர்களுக்குத் தலைவனாக கோமந்து என்

ஆம் அரசன், அந்த நாட்டை இருபத்தினான்கு கோட்டங்களாகப்பிரித்து, அதில், குறும்பர்களோடு வாசஞ்செய்திருந்தான்.

அதை யறிந்த ஆதொண்டைப் பெருமான், பலமுறை போர்செய்தும், போருக்காற்றாதவனைச் சோழிங்கபுரத்திற் போய் தங்கியிருந்தான். சோழிங்கபுர மென்பது, சோழ இலிங்க புரம் என்பதன் மருஉமொழி. அவ்விடம்சோழனால், சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, சிவாலயமுங் கட்டப்பட்டிருக்கிறது. அதனால், அந்தவூருக்குச் சோளிங்க புரமெனப் பெயர்வழங்கி வருகின்றது,

அச்சிவபெருமான் திருவருளால், மறுபடியும் ஆதொண்டைப்பெருமான் படையெடுத்துக் குறும்ப ரசனை வெற்றிகொண்டு, புழற்கோட்டையைப் பிடித்து, மற்றகுறும்பர்களையும் எதிர்த்து செயங்கொண்டது மல்லாமல், கொல்லைமலைகூர், நீலகிரிமுதலிய விடங்களுக்குத் துரத்திவிட்டான். அப்பால், ஆதொண்டைப்பெருமான் தன்னுடன்கூட சோழதேச மிருந்து வந்த வேளாளர்களை இந்நாட்டிற் குடியேற்றினான். அன்றியும், முன்னர் இந்நாட்டில் குடியரசாயிருந்து புறநாட்டிற் குடியேறியிருந்த கொண்டைகட்டி வேளாளரையும் அழைப்பித்துக் குடியேற்றினான், பின்னர், அவர்களைக் கொண்டு காடாயிருந்த பாகங்களை யெல்லாம் வெட்டி நாடாகச்செய்வித்துவந்தான். இதற்குப் பிரமாணம்.

கம்பர்பாடிய - ஏரெழுபது.

மேடுவெட்டி வளப்படுத்தி மெய்வரம்பு நிலைநிறுத்திக்
கோடுவெட்டிக் காராளர் குவலயத்தைக் காத்திலரேற்
பாடுவெட்டிக் குறும்படக்கப் படைவேந்த ரவர்வினைத்த
காடுவெட்டிப் பகையறுத்துக் களிகளைய மாட்டாரே.

வேளாளர்களையேதேடிக்கொண்டு வந்து இந்நாட்டிற் குடியேற்றுவானேன் என்னில்? இத்தேசங்களிலுள்ள காடெல்லாம் நாடன்றாம், பின்னை நாடெனப்படுவது யாதெனில்?

நாயனார் - குறள்.

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

இதன் கருத்து:-குறைவிலாது பயிர் செய்யும் வேளாள ரும், அறவோரும், சிறந்தகல்வி, செல்வமுடையாரும், சேர்ந் துள்ளதே நாடாம்.

அரசனொடுகூடச் சோழநாட்டி லிருந்து வந்த சோழிய ரும், மற்ற வேளாளர்கள் நற்குடி நாற்பத் தெண்ணாயிரம், பசுங்குடி பன்னீராயிரம் ஆக அறுபதினாயிரம் பேர்கள். இவர்களில், இந்நாட்டுநிலத்தைத் திருத்துவதால் உண்டாகும் அதிகப் பிரயாசையையும், அதனால் கிடைக்கும் சொற்ப பலனையுங்கண்டு வெறுப்படைந்து, சோழியர் பலர் பழைய படி தங்கள் சுயநாடாகிய தென்சோழம்போய்ச் சேர்ந்தார் கள். அவர்களில் சிலரே இந்நாட்டில் தங்கியிருப்பவர்கள். அப் பால், கன்னடதேசமாகிய துளுவநாட்டிலிருந்து வரவழைத்த துளுவவேளாளர்கள் இந்நாட்டைக் கூடியவரையில் வளப்படு த்தி ஆதொண்டைப் பெருமானால காணிமுதலிய சுதந்தரங்க ளைப் பெற்றார்கள். இவர்கள், சிலகாலங்கழித்தபின், பூவிருந்த வல்லியார், பொன்னேரிமரபார் என இருவகுப்பாகப் பிரிந்து, தாங்கள் நடந்துகொள்வதற்காக, தனித்தனி சட்டங்களேற் பாடுசெய்துகொண்டு, அந்தந்த வகுப்பார்களுக்குள்ளாகவே கொள்ளல், கொடுக்கலாதி சம்பந்தஞ் செய்துவருகிறார்கள். சென்னை நாட்டுப்பிள்ளையார், கிராமதேவி, பெருமாள் உரி யடி, உற்சவ முதலிய கரும காரியாதிகளில், ஒத்துமையா யிருந்து நடத்திவருகின்றனர்.

மேற்கண்ட மூன்று வகுப்பாரும் தொண்டைமண்ட லத்தில், இக்காலத்தும் பிராசுபாத்தியதையைப் பெற்றிருக்கிறார் கள். இதில், * சோழியரும், கொண்டைகட்டிகளும் தனித் தனியாகப்பிரிந்து வசித்து வருகின்றனர்.

அவர்களுக்காகவே ஆதொண்டைப்பெருமானால், தனது வடசோழத்தை இருபத்திநான்கு கோட்டமும்; எழுபத் தொன்பது நாடும், ஆயிரத்தித்தொளாயிரம் நத்தமாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஏரெழுபது.

கோட்டமோ ரிருபானான்கு கூறநா டெழுபத்தொன்பான்
னொட்டெழி லாயிரத்துத் தொளாயிர நத்தமாகும்

நாட்டொடு *கோத்திரங்கள் சகத்திரம் பன்னிரண்டாம்
நாட்டில்மேல் வாளர்தம்மை நவின்றிட வடங்காலக்கம்.

இவைகளிற்சில மறைந்துபோயின வென்பது பின்வருஞ் செய்யுளாலறியலாம்.

பிராசுரையிட்டு.

சீர்கொண்ட தொண்டைமண் டலமிருப தடனாலு
செப்பிடின் கோட்டமவையிற்
சேருமெழு பத்தொன்ப தாகுநா டவையினூர்
தெசநாலு நவநூறதாம்
பார்கொண்ட கோத்திரம் பன்னிரா யிரமுன்
பகர்ந்தபட் டயமுள்ள திப்
பட்டயந் தனிலில்லை யுள்ளபடி முன்னோர்
பகர்ந்திடு மூர்களவையில்
வேர்கொண்ட காடுசில வாயவோ திரைவீசு
வேலைசில கைக்கொண்டதோ
வெற்றரசர் நாட்டினிற் சேர்ந்திட்ட வோவலது
மேடாய் வளர்ந்திட்டவோ
கார்கொண்ட நீர்கொண்டு பள்ளவழி யாயவோ
கழறுமிவ் வூர்களெலாங்
கச்சியிற் கல்வெட்டு செப்பேட்டி னுளவென்று
கற்றநா வலர்சொன்னதே.

சேக்கிழார் புராணத்துட் கூறியபடி நற்குடி - நாற்பத் தெண்ணாயிரமும் உளவெனக்கொள்க - மேற்கண்ட நத்தம் ஆயிரத்துத்தொளாயிரத்தில், இக்காலத்திலுள்ளது - அறநூற் றென்பது தான். ஏனைய நத்தங்கள் கடலில் ஆழ்ந்தனவோ, அல்லது, காடுமேடு பள்ளங்களாய் விட்டனவோ என்று சந்தேகிக்க இடமுண்டாகிறது.

மேற்கூறிய செய்யுட்களால் வேளாளர்களுக்குக் கோட்டங்களும், நாடுகளும், நத்தங்களும், கோத்திரங்களும், உண்டென்பதைக் கண்டு தெளியலாம்; கச்சியிற் செப்பேட்டிலுங் காணலாம்.

---

*கோத்திரமென்பது யாதெனில், ஒருவன்றானும், தன் மூதாதைகளுந் தோன்றுதற்குக் காரணமாயிருந்த மூலபுருஷன் வழியை விளக்குவதாம்.

வேளாளர் கோத்திரமாவது - பூர்வத்தில், மனுவிடத்திருந்து மரீசி, அத்திரி, ஆங்கிரச, புலத்தியன், புலகன், கிரது, பிரதேச, வசிட்டன், பிருகு, நாரதன் ஆகிய தசப்பிரபர்கள் உண்டானார்கள். அவர்களில், புலத்தியன் புத்திரர்களாகிய ஆஜ்ஜியபர்ப் பிதிர்களினின்றும் வைசியர்களாகிய வேளாளர் உண்டானார்கள். இவர்களுக்கு, ஆதிகோத்திரம் புலத்திய மகாரிஷி கோத்திரமாம். அதிலிருந்து அநேககோத்திரங்கள் பிரிந்தன. அதன் படியே பிற்காலத்து வேளாளர் ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு கோத்திரத்தை அநுசரித்துக் கொண்டு வருகிறார்கள். கோத்திரந் தெரியாதவர்கள் பொதுவாக சிவகோத்திரமென்று வழங்கி வருகிறார்கள்.

அந்தணர், அரசரைப்போலவே வேளாளரும், ஒரே கோத்திரத்தில் விவாகஞ்செய்து கொள்ளுகிறதில்லை.

மேலும், அந்தந்தப் பிதுரர்களுக்கு, அவ்வவர் கோத்திரத்தோடும், மணம்புரியாத பெண்களுக்குத் தந்தைகோத்திரத்தோடும், மணம்புரிந்த பெண்களுக்குக் கணவன் கோத்திரத்தோடும் தருப்பணஞ் செய்ய வேண்டும்.

வேளாளருக்கு எக்கியோபவீதம், * உபநயனம்.

வேளாளர் விதிப்படி எக்கியோபவீதத்தை விவாகத்திற்கு முன்பாக தரித்துக் கொள்வதை இல்லையென்று யாரால் மறுக்கக்கூடும். சிலர், பிராமணரைப்போல இவர்கள் எக்கியோபவீதத்தை சதா தரிப்பதில்லையே யென்று நினைப்பார்கள். இதற்குத் தக்கசமாதானம்: அதிசுலபத்திற் கூறலாகும். அதாவது, வேளாளர் பிராமணரைப் போலல்லாமல், விவசாயமுதலிய தமது லௌகிக கருமங்களாற் கீழ் வகுப்பினரோடு பழகுதல் அடிக்கடி வாய்ப்பதாலும், அப்பழக்கத்தால் தாந்தரிக்கும் எக்கியோப வீதத்திற்கு அபரிசுத்தஞ் சம்பவிப்பதாய் பாவித்து, சதா தரிப்பதை விட்டு, எக்கியோப வீதத்தைத் தரிக்கும் கௌரவவிதி வழுவாது தீக்ஷை, விவாகம், சீமந்தம், தருப்பணம், அந்தியேஷ்டி, ஆப்திகமுதலிய விரதானுஷ்டான லௌகிக வைதிக கருமங்களில் உபயோகப்படுத்திவருகிறார்கள். ஆதலின், வேளாளருக்கு எப்போதும் எக்கியோபவீதம் உண்டென்பது சாஸ்திரப்பிரசித்தம்.

---

*உபநயன மென்பது - ஞானக்கண்ணென்பதாம்.

ஸ்ரீபஞ்சாக்ஷரவிளக்கம்.

ஸ்ரீபஞ்சாக்ஷரமானது, சப்தகோடி மகாமந்திரங்களுள்ளும் சிறந்த மந்திரமாக விருக்கின்றது. ஸ்ரீகண்டபரமேசுரர் குருமூர்த்தமா யெழுந்தருளி சனகாதிமுனிவர்களுக்கு அநுக்கிரகித்த மகாமந்திர மிதுவேயாம். ஸ்ரீ பஞ்சாக்ஷரமே சிவபெருமானிருக்குமிடம்.

சிதாகாசமாகிய சிற்சபையின்கண்ணே பஞ்சாக்ஷரப்படியின்மீது ஆனந்தத் தாண்டவம் புரியும் ஸ்ரீ நடராஜப்பெருமான் எழுந்தருளியிருக்கின்றார். நாம் அவர் திருவடியிற்சென்றடையவேண்டுமாகில், பஞ்சாக்ஷரப்படி ஏறினாலன்றி அடையக்கூடாதாம். ஈண்டு பஞ்சாக்ஷரப்படி யேறுதலாவது,சித்தசுத்தராயிருந்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் சதா உருவேற்றுதலாம். ஸ்ரீபஞ்சாக்ஷரமே சிவவடிவம்.

நகரம்—திருவடி, மகரம்-வயிறு, சிகரம்-தோள்,
வகரம்—முகம், யகரம்-சிரசு. இதற்குப்பிரமாணம்.

சிவவாக்கியம்.

நவ்விரண்டுக் காலதாய் நவின்றமவ்வு வயிறதாய்
சிவ்விரண்டுந் தோளதாய் சிறந்தவவ்வு வாயதாய்
யவ்விரண்டுக் கண்களா யமர்ந்திருந்த காரணம்
ஒவ்வுஞ் சராசரம் ஓங்கமசி வாயமே.

இவ்வகையாகப் பஞ்சாக்ஷரங்களினின்று சராசரங்களெல்லாந் தோன்றியனவாம்.

திருமந்திரம்.

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே.

இப்பஞ்சாக்ஷரமே 4-வேதம், 28-ஆகமம், 18-புராணங்களில் கூறும் முத்தியைத்தரத்தக்க உண்மைப் பொருளாம்.

வேளாளர்செய்யும் பஞ்சமகாவேள்வி.

வேளாளருக்கும் பிராமணர்களைப்போல பஞ்சமகா வேள்விகள் அநுஷ்டானத்தில் உண்டோவெனில், உண்டு.

அவை:— பிரமவேள்வி, தெய்வவேள்வி, பிதிர்வேள்வி, மானிடவேள்வி, பூதவேள்வி, என வேள்வி ஐந்தாம்.

1-வது. பிரமவேள்வி என்பது, வேதமோதுதலன்றோ? வேளாளர்கள் திராவிடவேதமாகிய தேவார திருவாசகங்களைப் படுக்கைவிட்டெழுந்த போதும், சந்தியாகாலத்தும், பூசாகாலத்தும், சிவாலயசேவைகாலத்தும், இவர்கள் தமிழ் வேதத்தை அனுஷ்டித்து வருகிறார்களென்பதே சான்றாம். வைதிகநெறியை யனுசரித்திருக்கும் வேளாளர்கள், தமிழ் வேதபாராயணம் ஆலயங்களில் செய்து வருவதால், அவர்களை ஓதுவார்களென்று வழங்கப்பட்டு வருகின்றது.

2-வது. தெய்வவேள்வி என்பது, அக்கினிகாரியமாம். வேளாளரில் சிவபூசை செய்வோர், மந்திரமூலமாகப் பாவனை வேள்விசெய்து பூசையை முடிக்கின்றார்கள். மற்றயர்கள் கிருகப்பிரவேசம், உபநயனம், கல்யாணம், சீமந்தம், மகப்பேறு, நாமகரணமுதலிய சுபகாரியங்களிலும், சிவப்பிராயச்சித்தம், சூர்ணோர்ச்சலம், அந்தியேஷ்டி முதலிய அசுபகாரியங்களிலும் அக்கினிகாரியம் செய்துவருகின்றார்கள்.

3-வது. பிதிர்வேள்வி என்பது, சிரார்த்த காலங்களில், பிதிரர்களை ஆவாகித்து வேளாளர்கள் அன்ன சிரார்த்தம், ஆமசிரார்த்தம், இரணியசிரார்த்தம் என்று உத்தம, மத்திம, அதம சிரார்த்தங்களில், ஏதேனும் ஒன்றை, அவரவர்கள் செய்து வருகின்றார்கள்.

4-வது. மானிடவேள்வி என்பது, அதிதி, அப்பியாசிகளுக்கு அன்னமிடுதல். இது வேளாளர்களுக்கு சுபாவத்தி லுள்ளதாம்.

இதற்குப்பிரமாணம்.

திருக்குறள்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு,

என நாயனார் கூறியதுணர்க.

5-வது. பூதவேள்வி என்பது, இலையிலிட்ட அன்னத்தைப்பிசைந்து சீவர்களுக்காகப் பலிவைத்து நீர்வளாவி, பின்னர்க்காகத்திற்குப் பலிகொடுத்துத்தேவாராதனைசெய்து உண்பது வேளாளர்களுக்கு வழக்கத்தி லுள்ளதா யிருக்கிறது.

மேற்கூறியவற்றுள், பிரமவேள்வியை வேதாத்தியானத்தாலும், தெய்வவேள்வியை ஓமத்தினாலும்; பிதிர்வேள்வியை சிராத்தாதிகளில் பிதிர்க்களை உண்பித்தலாலும், மானிடவேள்வியை * அதிதி, † அப்பியாகதர்களுக்கு உணவளித்தலாலும், பூதவேள்வியைத் தானுண்ணும்போது காகமுதலிய சீவராசிகளுக்குப் பலியிடுதலாலும் திருப்திகரமுண்டாமென்று மநுதர்ம சாஸ்திரங் கூறுகின்றது.

தேவர்குறள்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் றலை.

இவ்வேள்வி தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என ஐவகையாகத் திராவிடவேதத்திற் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

பொய்யாமொழி.

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

இப்பிறப்பில், விருந்தினரை யுபசரிப்பவன், மறுபிறப்பில் தேவனாகப் பிறந்து, தேவர்களால் உபசரிக்கப்பெற்று சுவர்க்கபோகத்தை யடைவனென்பது நான்முகனார்கருத்து

தமிழ்மறை.

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

இதன் கருத்து—உத்தம பாத்திரத்திற் செய்யும் வேள்வியின்பலன், இவ்வளவினதென்று வரையறுக்கப்படாதென்பதை நாயனார் விளக்கிக் கூறினர்.

பெறுதற்குரியபேறு.

உலகின்கணுள்ள சிறப்புடைய மாந்தர் பெறுதற்குரிய பேறுகள் பதினாறும். அவை:—புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் என்பனவாம்.

---

* அதிதி-ஒருராத்திரி வரையும் புதிதாய் வந்திருப்பவன்.
† அப்பியாகி-நாடோறும் வாராமல், ஒருகாலத்தில் வருகிறவன்.

எப்போதுஞ் சிறியோர், பெரியோரை வணங்குங்காலத்தில், பதினறும்பெற்றுப் பெருவாழ்வு வாழ்கவென ஆசிர்வதிக்கிறார்கள். இதன் பொருளறியாதார் பதினறுபேறென்று, பதினறு பிள்ளைகளென்று பொருள் கொள்ளுகிறார்கள். அதுபொருந்தா தென்பதற்குப் பிரமாணம்.

மேற்கூறியவற்றாலும், பிற்கூறுஞ் செய்யுளாலுங்காண்க.

சீவக்சிந்தாமணி.

உருவளர் வயது பூமி யுயர்தலங் கருணை யூக்கம்
பெருநிதி யொழுக்கஞ் சீலம் பேரறி மானங் கல்வி
பொருவலி விசைய வீரம் புண்ணிய மாதர் போகந்
திருமலி புகழி ரெட்டுஞ் சீவக னொருவன் பெற்றான்.

முற்கூறிய பேற்றிற்கும், இதிற்கூறிய பேற்றிற்கும் சிற்சில பேதப்படுகின்றன.

வேளாளர் குலாசாரவிதி.

நமக்குக் கடவுள் நல்லறிவைக் கொடுத்திருப்பதால், அதைக் கொண்டு நாம் இப்போது வேளாளர் வைசியரோ அல்லது, சூத்திரரோவென விசாரித்து ஒன்றினை நிச்சயிப்போமாக. வேளாளர் வைசியரே என்னில், அவ்வைசியர்க்குரிய அறுதொழில் இவர்க் கெங்ஙனமுள? எனின்.

1. வேதமோதல்—வேதமென்பது, ஆரியத்திலும், திராவிடத்திலுமுள்ளது.

வேளாளர் திராவிடரானதால், தமிழ்வேத மோதுகிறார். அவருக்கு ஓதுவாரெனப் பட்டமும் உண்டாயிருக்கிறது.

2. வேள்வி—வேளாளர் பிரமவேள்வியாதிய பஞ்சமகா வேள்விசெய்து வருகிறார்கள். கல்யாணமாதிய காலங்களில் அக்கினிவளர்த்துப் பூசிப்பதும், ஔபாசனாதி கருமங்களியற்றுவதும் யாவருமறிந்த விஷயம்.

3. ஈதல்—வேளாளரென்ற பதத்திற்குப் பொருள் ஈகையாளர் என்பது அகராதி நிகண்டா லறியலாம்.

4. இருஷி—வேளாளரின் பரம்பரைப் பாத்தியத் தொழிலாயுள்ளது பயிர்த்தொழில் என்பது.

5. வாணிகம்—வேளாளர் தமது விளைநிலத்தில் உற்பத்தியாகும் நன்செய் புன்செய் தானியங்கள். புளி மிளகாய் உப்பு முதலிய பற்பல பண்டங்களை யெல்லாம் தங்களுக்கு வேண்டுமளவு வைத்துக்கொண்டு மிகுந்துள்ளவற்றை விற்றலும், இல்லாதனவற்றைக் கொள்ளலும், வெளிப்படையாம் இவர்களில், வேளாண் செட்டிப்பட்டமும் உண்டு.

6. ஆனிரைகாத்தல்—உழவுக்கு எருதும், விளைநிலத்திற்கு எருவும் இன்றியமையாத விஷயமாதலால், வேளாளர் பசுவைப் பாதுகாத்து வருகிறார்கள்,

வேளாளர், மேற்கண்ட அறுதொழில் செய்துவருவதால் வைசியரென்பதற்கு ஐயமின்றாம்.

மநுவில்—மரணசூதகம் அந்தணாதி நால்வர்க்கும்,10-12-15-30-நாள் என முறையே விதிக்கப்பட்டிருக்கின்றது. வேளாளராகியவைசியர் பண்டைக்காலந் தொடங்கி 15-நாள் சூதகம் காத்து 16-ம் நாளில் உத்தரகிரியை செய்து முடிக்கின்றார்கள்.

நிலவுரிமை பெற்றுள்ள ஒவ்வொரு மிராசுதாரர்களும் ஆங்கிலேயரால் (நிலகர்த்தர் என்னும் பொருள்படும்) Land-Lords என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகிறார்கள்,

வேளாளர், ஆதிகாலந்தொடங்கி அரசர்களுக்கு முடிசூட்டவும், அவர்களைத் துலாபாரச் சடங்கில் துலையிலேற்றி நிறுக்கவும், மண்டிலமாக்களாயும், தண்டத்தலைவராயும், அரசுரிமையும், மந்திரத்தலைமையும், தந்திரக்கிழமையும், நடத்தவும் அதிகாரம் பெற்றிருந்திருக்கிறார்கள்.

ஆதொண்டச் சக்கரவர்த்தியால், தொண்டைமண்டலம் நாடுகளாகப் பிரிந்தகாலத்தில், வேளாளர்களை ஒவ்வொரு நாட்டுக்கும் தலைவராக்கி நாட்டாரென்று பட்டமுங்கொடுத்து; மற்றைச் சாதியாருள் உண்டாகும் சாதிவிவகாரங்களை விசாரிப்பதற்கு அதிகாரமுங் கொடுத்திருக்கின்றனர்.

வேளாளருக்குப் பணிசெய்ய ஆதொண்டச் சக்கரவர்த்தியால் 18-குடிமக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இல்லறவொழுக்கம்.

பூர்வதவத்தினால், பூவுலகிற்றோன்றிய, புண்ணிய சீலர்கள், இளமையில்தானே கல்வி பயின்று, அறிவு, அடக்கம்,

பொறுமை, ஒழுக்கமுதலியநற்குணங்களைப் பெற்று,உத்தமத் தொழிலால் வரும் ஊதியத்தினாலே, குற்றமற்ற தங்கள் குலத்திற் பிறந்து, கற்பிற் சிறந்த கணிகையரை மணந்து, பக்தி நெறிவழுவாது தாய்தந்தை, சுற்றம், விருந்தினரையும், தங்கள் இருக்கைதேடிவரும் சிவனடியார் முதலிய பெரியோர்களையும் முகமலர்ந் தெதிர்கொண்டழைத்து உபசரிப்பதுவே இல்லறவாழ்க்கையினியல்பாம்.

ஆலய வழிபாடு.

அன்பு பூண்டொழுகும், அருங்குணம் வாய்ந்த, நற்குல மாந்தர், நித்திய விதிப்படி ஸ்நானஞ் செய்து, விபூதி, உருத்திராக்கம் அணிந்து, மகாபஞ்சாக்ஷரமந்திர செபம், பூசை, தேவாராதி தோத்திரஞ் செய்வதோடு, சோமவாரம், சுக்கிர வாரம், பிரதோஷம், பூரணை, அமாவாசி, சஷ்டி, கிருத்திகை, சிவராத்திரி, திருவாதிரை, சங்கிராந்தி, மாதப்பிறப்பு, வருஷப்பிறப்பு, பிரமோற்சவகால முதலியபுண்ணிய தினங்களில் விரதமிருந்து, சிவாலயத்திற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து வருவார்களாயின், இந்தசென்மத்தினால் அடையத்தக்க சுகிர்தமாகிய இஷ்டகாமியார்த்த சித்திகள்யாவும் எய்துவரென் பது உண்மை. இதற்குப் பிரமாணம்.

பிரமோத்தர காண்டம்.

கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்
 கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபாகனைப்பணியுந் தலைகளே தலைகள்
 பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னா
 பரன்சரிதை யேகேட்கப் பரிஞ்செவியே செவிக
ளண்ணல் பொலங் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்ச
 மவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை.

இச்செய்யுளின் கருத்து- ஆலயத்தைக்காண்பதும், அதற் குட் செல்வதும், சிவபெருமானைப்பணிவதும், பூசிப்பதும், தோத்திரஞ்செய்வதும், சிவகதையைக் கேட்பதும், அவர் திருவடியைச்சிந்திப்பதும், அவருக்கு அடிமையாவதும் நமது தேகத்துக்கணுருமாகிய அவயவங்களினால், அடையத்தக்க பயனும்.

திராவிடவேதத்தில் கூறும் உழவு.

சுழன்று மேர்ப் பின்ன துலக மதனு
லுழந்து முழவே தலை.

இதனால், உலகினுள்ளார் பற்பல தொழில் புரிந்தும் பசி யாற்றாராய், முடிவில் ஏருடையார் பின்னேனார்கள் என்பதாம். ஆதலின், எத்தனைய வருத்தமுறினும், முதன்மையான தொழில் உழவென்றார்.

உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

உழுதொழில் செய்யமாட்டாமல், பிறதொழில்களின் மேற் செல்வோரை யெல்லாம், இவ்வுழு தொழிலாளர் தாங்குதலால், உலகத்தாராகிய தேர்க்கு இவர் ஓர் அச்சாணிபோலு மாம்.

* இக்குறிப்பிட்டிருக்கும், 36-வது பக்கம் சோழியவேளாளர், ஆதியில், தென்சோழநாட்டில், காவிரிதீரத்தில் முதன்மைபெற்று விளங்கும், சிதம்பர முதலிய தலங்களை தரிசித்துக்கொண்டு மனோரம்மியமாக வாழ்ந்திருந்தவர்களாகையால், அவர்களைத் தொண்டைமான் சக்கரவர்த்தி தன்னுடை வடசோழ நாட்டுக் கழைத்துவந்து, முடிவில் சென்றவர்கள் போக, நின்றவர்களுக்கு, காணியாளரெனப் பட்டமுங்கொடுத்து தொண்டைமண்டலத்தில் தாபித்தனர்.

அக்காலமுதல், புண்ணியகோட்டி நதியென வழங்கும், குசஸ்தலை நதியைச்சார்ந்த கிராமங்களில் வசித்துக்கொண்டு, ஸ்ரீகாஞ்சீபுர முதலிய தலங்களை சேவித்துக்கொண்டு இவ்வேளாளர்கள் மிக வொற்றுமையாயிருந்து, ஒருவர்க்கொருவர் பழகிவருங்காலத்தில் (இல்லைப்பெண்ணல்லை தாண்டாதென்னும்) பழமொழியை யநுசரித்தே பெண்களைக் கொள்ளுவதும், கொடுப்பதுவுஞ் செய்துகொண்டு, சாதியேற்பாட்டுக் கிணங்கி நடப்பதைக்கண்டு அச்சோழிய வேளாளரில் மேதாவிகளாயுள்ள பெரியோர்கள் கூட்டங்கள்கூடி தாங்கள் நடந்து கொள்வதற்காக விவகார, ஆசாரமென்னும் சட்டத்தை ஏற்பாடு செய்துகொண்டு, அதன்படி நாளதுவரையில், மிகவும் க்ஷேமமாக ஏழையென்றும், தனவந்தரென்றும் பாராமல், ஒருவர்க்கொருவர் சம்பந்தஞ் செய்துவருகிறார்கள். தென்னாட்டில், சோழியருக்குப் பிள்ளை யென்றும், இந்நாட்டில் முதலி என்றும் பெயர் வழங்கி வருகின்றது.

சோழநாட்டிலுள்ளவர்கள் நெடுங்காலத்துக்குமுன் பிரிந்து விட்டமையால், இத்தொண்டை நாட்டிலுள்ளவர்கள் அவர்களோடு சம்பந்தா சம்பந்தஞ்செய்யவும், ஒருவர்க்கொருவர் சந்திக்கவும் இரயில்பாதை முதலிய சந்தர்ப்பங்கள் அக்காலத்திலில்லாமையால், தொண்டைநாட்டில்தங்கிய சோழிய வேளாளர்கள் தங்களுக்குள்ளாகவே சம்பந்தஞ் செய்து கொண்டு முற்கால வழக்கப்படியே நடையுடைபாவனைகள் தவறாமலும், நல்லொழுக்கங் குறையாமலும், புரோகிதர், மாணிக்கத்தாள், பணிசெய்வோன, வண்ணான், நாவிதன் முதலிய தொழிலாளிகளுக்கு சுபாசுபங்களில், தாம்பூலமுதலிய மரியாதை சுதந்தரங்களை நாட்டார்களாலும், பெரியதனக்காரர்களாலும் சபைகளில் நடத்திக்கொண்டுவருகிறார்கள்.

இக்காலத்தும், தொண்டைநாட்டிலுள்ள, சோழியவேளாளர்கள், சுபாசுபங்களில், மரியாதை நடத்தும் போது, தரங்கன்பாடி, கும்பகோணம், மஞ்சாகுப்பம், புதுவை, பொன்விளைந்தகளத்தூர், என்று தங்கள் முன்னோர் ஆதியில் வசித்திருந்த ஊர்பெயரை வழங்கி வருகிறார்கள். இதனால்பூர்வஞ் சோழதேசத் தவரென்று விசிதமாய் விளங்குகின்றன.

தொண்டை நாட்டில் வசிக்கும் சோழிய வேளாளர்கள்.

செங்கல்பட்டுஜில்லா, பொன்னேரிதாலூகா.

1-வது. †வெள்ளிவாயல்நாடு, ஷை சாவடி, புங்கம்பேடு, திருநிலை, பெருங்காவூர், திருவொற்றியூர்.

2-வது. * குமரசிரளப்பாக்கம், பொன்னேரிதாலூகா.

3-வது. ,, அலமாதி, பொன்னேரிதாலூகா.

4-வது. ,, ஆயல்சேரி, திருவள்ளூர்தாலூகா.

5-வது. ,, அவணம்பாக்கம், தாமரைப்பாக்கம், ஷை தாலூகா.

6-வது. ,, கருக்கலவாக்கம், திருவள்ளூர்தாலூகா.

7-வது. ,, சென்னபட்டணம், சூளை, புரசைபாக்கம் டாக்கர்சத்திரம், கோமளீசுரன் பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை, வண்ணாரப்பேட்டை,

8-வது. ,, திருமயிலாப்பூர், திருவல்லிக்கேணி,

9-வது. ,, மணிமங்கலம், ஸ்ரீசைதாபேட்டைதாலூகா,

ஆ மொத்தகிராமம், 9.

---

† இக்குறிப்புள்ள தலைக்கிராமம், நாட்டார் வசிக்குமிடம்.

* இக்குறிப்புள்ள இக்கிராமங்கள்பெரியதனக்காரர் வசிக்குமிடம்,

மேற்கண்ட, ஒன்பது கிராமங்களிலும், ஷை சோழிய வேளாளர்வசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஷை மயிலாப்பூர் தேவடிக்குள்ளாக இவ்வேளாளர் இருக்குந்தெருவுக்குசோழியர் தெருவென்றும் பெயர்வழங்கி வருகின்றது. இவர்களில், பலர், பயிர்த்தொழிலும், சிலர்உத்தியோகமும், வியாபாரமும், கைத்தொழிலுஞ் செய்து சீவித்து வருகிறார்கள்; இந்த மரபாரிருககும், ஒவ்வொரு கிராமங்களில், யாதாயினும் விவகாரங்களுண்டானால், அவ்வூர்பெரியதனக்காரர்கள் உள்ளூரிலே கூட்டங்கூடி உடனுக்குடனே விசாரித்துப் பைசல்செய்வார்கள். அவ்விதம் முடிவுபெறாத விவகாரங்களை, வருடத்திற்கொருமுறை பங்குனிமாதத்தில், திருவொற்றியூர் கிழண்டை மாடவீதியிலிருக்கும் தங்கள் சத்திரத்தில் மகாநாட்டுக் கூட்டங்கூடி, பத்தூர் உறவின்முறையார் முன்னிலையில், நாட்டாரும், பெரியதனக்காரரும் விசாரித்து விவகாரங்களை முடிவு செய்துக் கொள்வார்கள்.

சுபாசுபங்களில், தாம்பூலம் நடத்துங்காலங்களில், யாதாமொரு காரணங்களைப் பற்றியாவது, இவர்கள் தருமமடத்துக்காவது, பூப்பந்தர், தண்ணீர்ப்பந்தர், தருமங்களுக்காவது, சேரவேண்டிய சட்டணங்களைப்பற்றி நாட்டாரும், பெரியதனக்காரரும், சபையார் முன்பாகப்பேசி பைசல்செய்துக்கொள்வது வழக்கம்.

இவர்கள் செய்துவருந் தருமங்கள்.

திருமயிலாப்பூர் ஸ்ரீ கபாலீஸ்வர சுவாமியார், பங்குனி மாத பிரமோற்சவகாலத்தில், வடவண்டை மாடவீதி கீழ்த்திசையில், நெடுங்காலமாகப் பூப்பந்தர்போட்டுத் தண்ணீர்ப்பந்தர் தருமமுஞ் செய்துவருகிறார்கள். இதைக்குறித்து,

திருமயிலைச் சிங்காரக் கும்மியில்.

மேழிப்பதாகை யுடையவராங்குண
மேவியகங்கா குலத்தவராம்
சோழியவேளாளர் வடகீழ்த்திசையில்
சொலிக்கும் பூப்பந்தர்-பாருங்கடி-அருள்
பலிக்குந் தேரிலே வாருங்கடி-என்று

வி. சுந்தரமுதலியார்பாடியிருக்கின்றனர்.

விநாயகமுதலியார்சத்திரம்.

திருமயிலாப்பூர் தென்மாடவீதியில், சித்திரச்சத்திரங் கட்டி, மகாவித்வான்களால், அநேகவிதமான தமிழ்ப்பிரபந்தங்களைப் பாடப்பெற்று, சென்னை ராஜதானியில் நற்கீர்த்தி வாய்ந்திருந்த, சோழியவேளாளராகிய வியாசர்பாடி-விநாயக முதலியாரவர்கள், தமது சத்திரதருமபரிபாலன விஷயமாக உறவின் முறையார் முன்பாக சிலாசாசனப் பத்திரமெழுதி 1851௵ ஜூன்௴ 17உயில், சுப்ரீங் கோர்ட்டில் ரெஜிஸ்தர் செய்திருக்கிறார். அதிலும், 1852௵ ஷை சத்திரத்தில் ஸ்தாபித்த சிலாசாசனத்திலும், ஷை விநாயக முதலியார் 1868௵ டிசம்பர்௴ 19உயில், தான் எழுதி ரெஜிஸ்தர் செய்வித்த உயில் பத்திரத்திலும், தனக்குப் பிற்காலந் தன்னால் நியமித்திருக்கும் எக்ஸிகியூட்டர்கள், ஷை சத்திரத்தின் தோட்டம், கடைகள் வருமானங்களைக் கொண்டு, ஷை சத்திரத்தில் நடத்தவேண்டிய, மாதம் இரண்டு துவாதசியில் பிராமண சந்தர்ப்பணையும், பிரதிவருஷம் பங்குனி மாதத்தில் வரும், பிரமோச்சவ காலத்தில், ஷை சத்திரத்தை அலங்காரஞ்செய்து சுவாமிக்கு தீபாராதனை, மராமத்து முதலியவைகள் செய்து அதன் வரவு, செலவு கணக்கை, தன்மரபாராகிய டிரஸ்டிகளுக்கு, ஆறுமாதத்திற் கொருமுறை கொடுக்கும்படியாகவும், அவ்விதம் கொடாமலும், ஷை தருமபரிபாலனத்தைச் சரியாய் நடத்தாமலும் இருப்பவர்களை, உடனே ஷை சத்திரதரும விசாரணை டிரஸ்டிகள் நீக்குதல் செய்து, தங்களுக் கிஷ்டமானவர்களை நியமித்து, ஷை தருமம் எப்போதும் நடந்துவரத் தங்கள் மேற்பார்வையில் இருக்கவேண்டுமென்றும், ஷை சத்திரம் சோழிய வேளாளர் யாவருக்கும் பொதுவா யிருக்கவேண்டுவதென்றும், ஷை விநாயகமுதலியாரவர்கள், தனது மரபாரிடத்தில் நம்பிக்கைவைத்து, மேலெழுதியிருக்கும் மூன்றுரிகார்டுகளினால், யாவரும் அறியும்படி அதிகாரமும் கொடுத்திருக்கிறார்.

அதை யநுசரித்து, ஷை சத்திரமும், தோட்டத்தின் விர்த்திகரமும், ஷை துவாதசிகட்டளையின் வருமானத்தின் உபயோகமுறைமையும், சரியாய் நடக்கிறதாயென்பதைக், கண்ணோக்கம் வைத்து, அவைகளைச் சீர்திருத்தஞ் செய்விப்பார்களாகில், மரபாருக்கு மேலானபுகழும், புண்ணியமும் உண்டாகும்.

ஷை முதலியாரவர்கள், தமிழ் வித்வான்களுக்கு ஒரு கற்பகத்தருவைப்போல விளங்கி யிருந்தனர். இவர்மீது இயற்றியுள்ள பிரபந்தங்களின் மணமாகிய கீர்த்தியே இன்றும், இவர் சுற்றத்தினருக்கு சிறந்த மதிப்பினைத் தந்து வருகின்றன.

ஷை சத்திரத்தின்மீது வித்வான்கள் பாடிய
சிலசெய்யுட்கள் வருமாறு.

வெண்பா.

பாங்கியரே மாமயிலை பங்குனிம கோச்சவத்தில்
தாங்கிய விநாயகவேள் சத்திரஞ்சென் — றுங்கவிக்கு
வந்தருளுஞ் செம்பொருளும் வண்பொழிலுந் தண்ணிழலும்
பந்தர்களிற் சுந்தரமும் பார்.

கட்டளைக்கலித்துறை.

ஏகாதசிவிரதப் பூசுரர்பன் னிருவருக்கும்
வாகாய்த்துவாதசி நாளன்னமுக்கனி வர்க்கமுடன்
ஞாகாதிபருமல் காத்திடஇட்டி லம்பயக்கும்
யோகாதிபனம் விநாயகபூபதிக் கொப்பெவரே.

விருத்தம்.

மைமணக்கும் விழிமாதர்க் கொருமதனன் பாவலர்க்கு வைப்பாயுள்ளோன், மெய்மணக்கும் வாய்மயிலை விநாயகமால் சத்திரத்துள் விரும்பிப் புக்கு, நெய்மணக்குங்கறியமுதுந்திருவமுது மவாவடங்க நிரம்ப வுண்டோர், கைமணக்கும் வாய்மணக்குங் கழுவியபின் னீருகனி கமழு மாலோ.

விருத்தம்.

தெருள்பெற்றான் வியாசநகர் விநாயகமா லதற்கேற்பச் செயிர்தீர்மிக்க, பொருள்பெற்றானதற்கேற்பமயிலையிற்சத்திரங்கட்டிப்புகழ்சால்பெம்மா, னருள்பெற்றானிவனன்றிப்பொருள்பெற்றுமறஞ்செய்யாரவனியுள்ளார், மருள்பெற்றார்சிறுமைபெற்றாரின்னுமென்பெற்றாரென்னில்வசைபெற்றாரே.

விருத்தம்.

பட்டாலு மிசையாலும் படிப்பாலும் பலகாலும் பாவும் வியாசர், நட்டாலும் நலத்தாலுங் குலத்தாலும் பலத்தாலும் நயங்கொள்வாழும், எட்டாறு மூவார்ந்த கங்கைகுலவிநா யகமன்று வெண்சீர் காதில், கேட்டாலும் பார்த்தாலுஞ் சீர்திருத்த வெவருனைப்போல் கிளைஞர் தாமே.

மேலெழுதியிருக்கிற ஷை சித்திரச் சத்திரதருமங்களைப் பற்றி சோழியவேளாள மாபாருக்கெல்லாம் சம்பந்தப் படும்படியாக எழுதுவ தென்னையெனின், ஷை விநாயக முதலியார் ஷை மரபைச்சார்ந்தவராயும், ஷை சத்திர தருமபரிபாலன விசாரணைப் பொறுப்பையும் ஷை சத்திரத்தையும் தனது மரபார்களுக்கே பொதுவென்றெழுதி யிருப்பதாலும், இதுகாறும் சத்திரதரும விசாரணைகளில், இவர்கள் பிரவேசியாதிருந்தமையாலும், ஷை சோழிய வேளாள மரபார், நிகழும் 1915ளு ஏப்பிரல்மீ 26உ யில் இந்தியா கவர்ன்மெண்டின் 1860ளு த்து 21-வது ஆக்கிட்டின்படி தொண்டைமண்டலம் சோழிய வேளாளர் மரபு தர்மசங்கம் என்று சென்னையில் ரெஜிஸ்தர் செய்துகொண்டயாதால்தில், தங்களைச்சார்ந்த தருமங்களையும், இதர தருமங்களையும், பரிபாலித்தலென்னுந் தாற்பரியத்தை அநுசரித் தெழுதியதென்றறியவும்.

திருவொற்றியூர் கீழண்டை மாடவீதியிலிருக்கும், வெள்ளிவாயல் சோழிய வேளாளர் மடத்திலும், ஷை வீதியிலுள்ள சத்திரத்திலும், பிரதிவருஷம் மாசிமாதத்தில் வரும்பிரமோச்சவமுதலியகாலத்தில், சுவாமிக்கு தீபாராதனையும், தண்ணீர்ப் பந்தர் தருமமும் நடத்திவர ஷை தரும சங்கத்தார் எடுத்திருக்கும் முயற்சியில், பத்தராருஞ் சேர்ந்து பொருளுபகரித்து, ஷை சத்திரத்தில், மேனெரான்றெடுத்து, கட்டடவேலையும் முடித்து, ஷை சங்கத்தின்பெயரால், ஷை மடத்திலும், சத்திரமுகப்பிலும், ஒவ்வொரு சிலாசாசனம், ஸ்தாபித்தல் வேண்டும்.

மேலும், இம்மரபைச்சார்ந்த சிறுவர், சிறுமியர்தேர்ச்சியடையும்பொருட்டு, கல்விச்சாலை ஒன்று, ஷை சங்கதின் பெயரால் ஸ்தாபிப்பது, மேலானகீர்த்தியையுண்டாக்கும்.

இந்த மரபாரில், யாவராயினும் சொந்தத்தில் செய்து வரும் தருமங்களை, ஷை தர்ம சங்கத்தார் மூலமாகச் செய்துவரும்படி யேற்பாடு செய்வார்களாயின், அத்தருமம், பத்திலும் விழுந்த பாம்புஞ் சாகாதென்னும் பழமொழிக்கிணங்க, ஷை தருமங்கள் க்ரமமாக நீடித்து நடந்துவருமென்பதையாவருஞ் சிந்திக்கவும்.

ஷை தொண்டைமண்டலம் சோழியவேளாளர் மரபுதர்ம சங்கம் விர்த்தியடைவதற்கான முயற்சியை, ஷை மரபாரெல்

224501

லாருந் தேடவேண்டும், அதற்காக [illegible]யோப் பத் தொகையாகவாவது, அல்லது, சக்திக்குத்தக்கபடி ஈவு தொகையாகவாவது, உபகரித்து வருவார்களாயின், டை சங்கம் விர்த்தியடைந்து, அதனால் நடைபெறவேண்டிய தரும காரியாதிகளும், இனி செவ்வனே நடந்துவருமென்பதை யாவரும் கவனித்துவர வேண்டும். சயம்! சயம்!! சயம்!!!

கம்பர்பாடிய * ஏரெழுபது.

வாழிநான் மறையோர்கள் வளர்க்கின்ற வேள்விகளு
மாழியா னுலகளிக்கு மடல்வேந்தர் பெருந்திருவு
மூழிபே ரினும்பெயரா வுறையுடைய பெருக்காளர்
மேழியால் விளைவதல்லால் வேறொன்றால் விளையாவே.

முற்றிற்று.

இச்சரிதந் தொகுத்தவர் கூறிய

விருத்தம்.

சந்தரப் புலவ னெங்குஞ் சோழிய ரொழுக்க மென்மைச்
செந்தமிழ்க் கலைக ளெல்லாந் திகழவே தாசமத் தின்
மந்திர வருண சிந்தா மணியல நூல்க ளாய்ந்து
இந்தநற் சரிதை யன்பா லெழுதிய தெனபர் மேலோர்.

——):o:(——

தோத்திரப்பாக்கள்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சற்குரு வணக்கம்.

குருமுனிவ னகங்களிக்கத் தவமுனிவர் மகிழ்சிறக்கக் குவலயத்தோர், வறுமைதவிர்த் தென்ஞான்றுஞ் சுகமேவ நீதிநெறி மார்க்கந் தன்னைப், பெறுவதற்கு முதநூலாய்ப் பிறங்குதிருக் குறட்பாவைப் பெட்பீ னீந்த, பொறுமைவளர்க் கருணையிலைச் சற்குருவாம் வள்ளுவர்தாள் போற்றல் செய்வாம்.

சிவஞானசித்தியார்.

நரர்பயில் தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்கபுண் ணியந்தான் ஆகும்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே.

தேவாரம்.

தேனைக்காவல்கொண்டுவிண்ட கொன்றைச்செழுந்தாரானை
வானைக்காவல்கொண்டுநின்றா ரறியாநெறியானை
ஆனைக்காவிலரனைபரனை யண்ணாமலையானை
யூனைக்காவல்கைவிட்டென்னை யுகப்பாருணர்வாரே.

தேவாரம்.

மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுள சுற்ற மென்னும்
வினையுளே விழுந்த ழுந்தி வேதனைக் கிடமா காதே
கனையுமா கடல்சூழ் நாகை மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீ ராகி லுய்யலாம் நெஞ்சி னீரே.

ஸ்ரீ நடராஜப்பெருமான்துணை.

திருத்தாண்டகம்.

அருந்துணையை யடியார்தம் மல்லறீர்க்கு
மருமருந்தை யகன்ஞாலத் தகத்துட்டோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும்விட்டு
வான்புலன்க ளகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போகமாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க்கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

சிற்றம்பலநாடிகள்.

ஆனந்த மேசெவி யம்புயத் தாளிணை யங்கைகளும்
ஆனந்த மேதிருக் கண்ணுஞ்செவ் வாயருண் மேனியெல்லாம்
ஆனந்த மேதிருச் சிற்றம் பலவ ரருட்பொருளும்
ஆனந்த மேயவன் றில்லையுங் காழியு மானந்தமே.

திருக்குறுந்தொகை.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சம்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர்த் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே.

திருச்சிற்றம்பலம்.

திருச்செந்திலாதிபன். சே[illegible]